# திருவரங்கம்
# அத்யயன உத்ஸவம்

**திருவரங்கத்தில் நடைபெறும் திருநெடுந்தாண்டகம், பகல் பத்து, இராப்பத்து, இயற்பா சாற்றுமுறை ஆகியவற்றைப் பற்றிய பல்வேறு குறிப்புகள் அன்பர்கள் எளிதில் படித்து மகிழும் வண்ணம் கீழே தரப்பட்டுள்ளது.**

**"செந்திறத்த தமிழோசை....."**

1) தமிழில் அமைந்துள்ள எழுத்துக்கள் 247. உயிரெழுத்து 12. மெய்யெழுத்து 18. உயிர் மெய்யெழுத்து 216. ஆய்த எழுத்து 1. ஆக மொத்தம் 247.

2) ஆழ்வார்கள் திருவரங்கனுக்கு மங்களாசாஸனமாக அருளிச் செய்த பாசுரங்களும் 247. பொய்கையாழ்வார்-1, பூதத்தாழ்வார்-4, பேயாழ்வார்-2, திருமழிசையாழ்வார்-14, நம்மாழ் வார்-12, குலசேகராழ்வார்-31, பெரியாழ்வார்-35, ஆண்டாள்-10, தொண்டரடிப்பொடியாழ்வார்-55, திருப்பாணாழ்வார்-10, திருமங்கை யாழ்வார்- 73. ஆக மொத்தம்-247 பாசுரங்கள்.

3) பூதத்தாழ்வார்-"இருந்தமிழ் நன்மாலை பாடிய பெருந் தமிழன்" என்றும்(இரண்டாம் திருவந்தாதி-74), நம்மாழ்வார்-"என் நெஞ்சத்துள்ளிருந்து இங்கு இருந்தமிழ்நூல் இவை மொழிந்து" என்றும் (திருவாய்மொழி 10-6-4), திருமங்கை யாழ்வார்-தம்முடைய பெரியதிருமொழி பாசுரங்களை "செஞ்சொல் மாலை" என்றும் (பெரிய திருமொழி 1-7-10) கூறிக் கொள்கின்றனர்.

4) இன்தமிழ் (பெரியாழ்வார் திருமொழி 3-2-10), ஒண்தமிழ் (பெரியாழ்வார் திருமொழி 3-6-10), கோவை இன்தமிழ் (பெரியதிருமொழி 9-10-9), ஞானத்தமிழ் (2ஆம் திருவந்தாதி 1), சங்கத்தமிழ் (திருப்பாவை-30), சீரார்ந்த தமிழ் (பெருமாள் திருமொழி 9-11), தண்டமிழ் (திருமங்கையாழ்வார் 2-2-10), நற்றமிழ் (பெருமாள் திருமொழி 5-10), பண்ணார் தமிழ் (திருவாய்மொழி 9-8-11), பாவளரும் தமிழ் (பெரியதிருமொழி

8-1-10), வண்டமிழ் (திருவாய்மொழி 4-5-10), வியன்தமிழ் (பெரியாழ்வார் திருமொழி 5-1-10), தூய தமிழ் (நாச்சியார் திருமொழி 6-11), செந்திறத்த தமிழ் (திருநெடுந்தாண்டகம்-4) என்றெல்லாம் ஆழ்வார்கள் தமிழைப் போற்றிப் பாடியுள்ளனர்.

5) மார்கழி மாதம் முழுவதும் பெரியபெருமாள் விச்வரூப ஆராதனம் கண்டருளும் போது அரையர்களின் திருப்பாவை விண்ணப்பத்தைத் தவிர வேறு வடமொழி மந்திரங்களைக் கொண்டு ஆராதனம் செய்யப்படுவதில்லை. இது தமிழுக்கே அமைந்த ஏற்றமாகும்.

6) பெரியதிருநாள் எனப்படும் பகல்பத்து, இராப்பத்து திருநாட்கள் தமிழ் மொழிக்கு ஏற்றம் அளித்திடும் ஒரு மாபெரும் விழாவாகும். ஆழ்வார்கள், ஆசார்யர்கள், நித்யசூரிகள், முமுக்ஷுக்கள் ஆகியோர் புடைசூழ பரமபதத்தில் நாலாயிரத்தைக் கேட்டு மகிழும் விழாவே நாம் காணும் அத்யயன உத்ஸவம்.

7) திருமங்கையாழ்வார் தம் வாழ்நாளின் பிற்பகுதியை திருவரங்கத்தில் பல கைங்கர்யங்களை மேற்கொண்டு எழுந்தருளி இருந்தார்.

8) ஆழ்வார்களில் சிந்தையாலும், சொல்லாலும், திருமதிள் களை அரணாக எழுப்பியும், பெரியபெருமாளுக்குத் தொண்டு புரிந்தவர்கள் இருவர். முதலாமவர் குலசேகராழ்வார். இரண்டாமவர் திருமங்கையாழ்வார். ***(மூன்றாம் திருச்சுற்றை குலசேகரப்பெருமாளும், நான்காம் திருச்சுற்றை திருமங்கைமன்னனும் எழுப்பினர்.)***

9) ஒரு கார்த்திகைத் திருநாளில் அழகியமணவாளன் நாச்சிமார்களுடன் திருமஞ்சனம் கண்டருளியபிறகு திருமங்கை மன்னன் திருநெடுந்தாண்டகம் என்கிற பிரபந்தத்தை தேவகானத்தில் பாடி மகிழ்வித்தார். அதன்பிறகு திருவாய்மொழி பாசுரங்கள் கொண்டு அழகியமணவாளனை உகப்பித்தார் திருமங்கையாழ்வார்.

10) இதனால் பெரும் மகிழ்ச்சி கொண்ட அழகியமணவாளன் ‘‘ஆழ்வார் நாம் உமக்கு என் செய்ய வேண்டும்?’’ என்று வினவினார்.

11) அதற்குத் திருமங்கையாழ்வார் ‘‘நாயிந்தே மார்கழி

மாதம் சுக்ல பக்ஷ ஏகாதசி தொடங்கி கொண்டாடப் படும் வேதத்திற்கான ஏற்றமிகு விழாவில் வேதங்களுடனே சடகோபன் அருளிச்செய்த திருவாய்மொழியையும் கேட்டு வடமொழி வேதத்திற்கு நிகரான தொரு பெருமையைத் திருவாய்மொழிக்குத் தந்தருள வேணும்''என்று விண்ணப்பித்தார்.

12) அழகியமணவாளனும் பெரிதும் உவகையுற்று தேவகானத்தில் பாடியதால் திருமங்கையாழ்வார் ''திருமிடர் நோவும்'' என்று அவர் தொண்டையிலே தைலக்காப்பைத் தடவச் செய்து நம்மாழ்வாரை திருக்குருகூரிலிருந்து அழைத்து வருவதற் கான ஸ்ரீமுகப்பட்டயம், மாலை பரியட்டம், சந்தனம் ஆகியவற்றை அனுப்பி கௌரவித்தார்.

✸✸✸

## ''திருநெடுந்தாண்டகத் திருவிழா''

1) திருமங்கையாழ்வார் நம்மாழ்வாருடைய நாலு பிரபந்தங் களாகிய திருவிருத்தம், பெரிய திருவந்தாதி, திருவாசிரியம், திருவாய்மொழி ஆகியவற்றிற்கு அங்கங்கள் போல ஆறு திவ்யப் பிரபந்தங்களை அருளிச் செய்துள்ளார். அவற்றில் ஒன்று திருநெடுந் தாண்டகம் என்னும் திவ்யப்பிரபந்தமாகும்.

2) திருநெடுந்தாண்டகம் ''தாண்டகம்'' என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது. இது 30 பாசுரங்கள் கொண்டது.

3) திருநெடுந்தாண்டகத்தில் முதல் 10 பாசுரங்கள் ஆழ்வார் தாமான தன்மையிலும் அடுத்த 10 பாசுரங்கள் ஒரு தாய் தன் மகளைப் பற்றிச் சொல்வதைப் போலவும், இறுதி 10 பாசுரங்கள் தலைமகள் என்னும் நிலையில் திருமங்கையாழ்வார் பெண்ணான தன்மையில் பாடிய பாசுரங்களாகும்.

4) திருநெடுந்தாண்டகம் வேதக்கருத்துக்களை தன்னகத்தே கொண்டதொரு வேதத்துக்கு ஒப்பானதொரு நூலாகும்.

5) திருநெடுந்தாண்டகம் 21ஆவது பாசுரமான ''மைவண்ண நறுங்குஞ்சி குழல்பின்தாழ'' என்று தொடங்கும்

பாசுரத்தில் ஸ்ரீபராசரபட்டர் மிகுந்த ஈடுபாடு கொண்டு விரிவான தொரு விளக்கவுரை அருளிச் செய்துள்ளார்.

6) இராமாநுசருடைய விருப்பப்படி கர்நாடக மாநிலத்தில் புகழ்பெற்று விளங்கி வந்த வேதாந்தியான மாதவாசார்யரை கூரத்தாழ் வானின் திருக்குமாரரான ஸ்ரீபராசரபட்டர் திருநெடுந் தாண்டகத்தின் விளக்கவுரை கொண்டு அவரைத் தம்முடைய சீடராக்கிக் கொண்டார். இந்த மாதவாசார்யரே நஞ்சீயர் ஆவார்.

7) மற்றைய திவ்யதேசங்களில் பகல்பத்து எனப்படும் விழா மார்கழி மாதம் அமாவாசைக்கு அடுத்த ப்ரதமை தொடங்கி தசமி ஈறாக நடைபெறும். மார்கழி சுக்லபக்ஷ ஏகாதசியே வைகுண்ட ஏகாதசி தினமாகும்.

8) திருவரங்கத்தில் மட்டும் ஸ்ரீபராசரபட்டர் வேதாந்தியான மாதவாசார்யரை திருநெடுந்தாண்டகம் கொண்டு திருத்திப் பணி கொண்ட நிகழ்ச்சி பகல்பத்துக்கு முதல்நாள் அரையர்களால் அபிநயித்துக் காட்டப் படுகிறது.

9) ‘‘சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறியாவும் தெரிந்த’’ இராமாநுசர் காலத்தில்தான் தமிழுக்குத் திருக்கோயில்களில் பெரியதொரு ஏற்றம் அளிக்கப் பட்டது.

10) இயல், இசை , நாடகம் என்னும் மூன்று கூறுகளைக் கொண்டது தமிழ். நாதமுனிகள் வழித் தோன்றல்களான அரையர்கள் கையில் தாளத்தோடும், இசையோடும் திவ்யப்பிரபந்தப் பாசுரங்களை பெரியபெருமாள் திருமுன்பு இசைத்து தமிழுக்கு ஏற்றம் அளிக்கும் பகல்பத்து, இராப்பத்து விழாவைத் திருநெடுந்தாண்டக தினத்தன்று தொடங்கி வைக்கின்றனர்.

11) அரையர்கள் தம் திருமாளிகையில் இருந்து குல்லாய் தரித்துக் கொண்டு பெரியபெருமாளுடைய காப்பந்தம், திருச்சின்னம் ஆகியவற்றுடன் புறப்பட்டு உடையவர் ஸந்நிதி, திருவரங்கப் பெருமாள்அரையர் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபார்த்தஸாரதி ஸந்நிதி, நம்மாழ்வார் ஸந்நிதி ஆகிய இடங்களுக்குச் சென்று ஸேவித்தபிறகு சந்தன மண்டபத்தில் கருடன் ஸந்நிதிக்கு அருகில் அமர்ந்திருப்பர்.

12) பெரியபெருமாளுக்கு வெள்ளைச்சரம், மாலைகள் சாற்றப்பட்டபிறகு தேங்காய்த்துருவல் அமுது செய்விக்கப்படும்.

13) ''கோயிலுடைய பெருமாள் அரையர்'' ''வரந்தரும் பெருமாள் அரையர்'' என்றோ அல்லது ''மதியாத தெய்வங்கள் மணவாளப்பெருமாளரையர்'', ''நாதவினோத அரையர்'' என்றோ அருளப்பாடு ஸாதிக்கப்படும். (பகல்பத்து, இராப்பத்து விழாக் காலங்களில் அரையர்களுக்கான அருளப்பாடு மேற் கண்டவாறே ஸாதிக்கப்படும்.)

14) அரையர்கள் திருக்கரங்களில் இருக்கும் ''நாதமுனி'' என்றழைக்கப்படும் தாளங்கள் பெருமாள் திருவடிகளில் சேர்ப்பிக்கப் படும். அரையர்களுக்கு ஸ்தானீகர் தீர்த்தம், சந்தனம், தொங்கு பரியட்டம், மாலை ஆகியவற்றை ஸாதிப்பார்.

15) பிறகு கர்ப்பக்ருஹத்தில் மேற்குப்பகுதியில் இருந்து கொண்டு ''பொங்குசீர் வசனபூடணமீந்த உலகாரியன் போற்றிடத் திகழும் பெருமாள்! போதமணவாளமாமுனி ஈடுரைப்பது கேட்டுப் பூரித்து நின்ற பெருமாள்!'' என்ற கொண்டாட்டங்களைச் சொல்லி திருநெடுந்தாண்டகம் முதல்பாட்டு ''மின்னுருவாய்'' என்பதை பல தடவை இசைப்பர்.

16) அரையர்கள் சந்தன மண்டபத்திற்கு எழுந்தருளியபிறகு ''மின்னுருவாய்'' என்று தொடங்கும் முதல் பாசுரத்தினை இசையுடன் அபிநயம் செய்வர்.

17) முதற்பாட்டிற்கு பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான அவதாரிகைகளும், இரண்டாம் பாட்டிலிருந்து 11ஆவது பாட்டான ''பட்டுடுக்கும்'' வரை தம்பிரான்படி வ்யாக்யானமும் ஸேவிக்கப்படும்.

18) திவ்யப்பிரபந்தப் பாசுரங்களுக்கு நாதமுனிகள் தொடக்கமான அரையர்கள் குலத்தில் உதித்தோர் எழுதி வைத்த வ்யாக்யானத்திற்குத் **தம்பிரான்படி** என்று பெயர். இவை அச்சு வடிவில் இல்லை. அரையர்களிடம் உள்ள ஓலைச் சுவடிகளில் பாரம்பரியமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

19) திருநெடுந்தாண்டகத்திற்கு அமைந்துள்ள தம்பிரான்படி விரிவுரை சொல்லழகும் பொருளழகும் கொண்ட கருத்தாழமிக்க சொற்றொடர்களாகும். இவற்றை கேட்கக்கேட்க உள்ளத்திலே மகிழ்ச்சி பொங்கும். திவ்யப்பிரபந்தச் சொற்கள் பின்னிப் பிணைக்கப் பட்டு சந்தத்தோடு அவை அரையர்களால் ஸேவிக்கப்படும் போது கேட்போர் உள்ளத்தில் திவ்யப்பிரபந்தத்தின் சொல்லழகு புலப்படும்.

**"பகல்பத்து முதல்நாள்"**

1) திருமங்கையாழ்வார் காலத்திற்குப் பிறகு நாதமுனிகள் காலம்வரை (கி.பி.823-918) இராப்பத்துத் திருநாளாகிய திருவாய் மொழித் திருநாள் மட்டுமே நடைபெற்று வந்தது.

2) நாதமுனிகள் யோகக்கலை பயின்றவர். நம்மாழ்வாரை யோக தசையில் கண்டு நாலாயிரத் திவ்யப்பிரபந்தப் பாசுரங்களையும் அவரிடம் கேட்டு அதைத் தொகுத்தார்.

3) திருவாய்மொழிக்கு அமைந்துள்ள ஏற்றம்போலே மற்றைய ஆழ்வார்கள் அருளிச் செய்த திவ்யப்பிரபந்தங்களுக்கும் ஏற்றமளித்திடும் வண்ணம் நாதமுனி காலந்தொடங்கி பகல்பத்துத் திருநாள் கொண் டாடப்பட்டு வருகிறது.

4) இந்தப் பத்து நாட்களில் நம்பெருமாள் அர்ஜுன மண்டபத்தில் ஆழ்வார்கள் மற்றும் ஆசார்யர்கள் புடைசூழ முதலாயிரம் மற்றும் இரண்டாமாயிரம் ஆகியவற்றில் அமைந்துள்ள மொத்தம் 947 + 1134 = 2081 பாசுரங்களை அரையர்கள் இசையுடன் பாடக் கேட்டு மகிழ்வார்.

5)பகல்பத்து முதல்நாள் காலை பெரியபெருமாள் திருமுன்பு கர்ப்பக்ருஹத்தில் திருப்பல்லாண்டு அரையர்களால் இசைக்கப்படும்.

6) பகல்பத்து உத்ஸவத்தில் கீழ்க்கண்ட வைபவங்கள் தினந்தோறும் நடைபெறும்.

**1) கருவறையிலிருந்து புறப்பாடு. 2) அர்ஜுன மண்டபத்தில் ஆழ்வார் ஆசார்யர்களுக்கு மரியாதை 3)அரையர் ஸேவை. 4) நிவேதன விநியோகங்கள். 5) ஆழ்வார் ஆசார்யர்கள் ஸ்தோத்ர பாட கோஷ்டியோடு தத்தம் ஸந்நிதிகளுக்கு எழுந் தருளல். 6) நம்பெருமாள் பகல்பத்து மண்டபத்திலிருந்து புதிய திருவாபரணங்கள் கொண்டை அணிந்துகொண்டு புறப்பாடு. 7)**

**வழிநடை உபயங்கள் கண்டருளல். 8) ராஜ மஹேந்த்ரன் திருச்சுற்றிலுள்ள மீனாட்சி மண்டபத்தில் தீர்த்த கோஷ்டி 8) பத்தி உலாத்துதல். 9) மேலைப்படியில் படியேற்றம். 10) திருவந்திக் காப்பு கண்டருளல். 11) ஸர்ப்பகதியில் கருவறைக்குள் எழுந்தருளதல்.**

7) நம்பெருமாள் திருவாபரணங்கள் பலவற்றை ஒவ்வொரு நாளும் அணிந்து கொண்டு கருவறையில் இருந்து ஸிம்மகதியில் புறப்பாடு கண்டருளுவார்.

8) சந்தன மண்டபத்திற்கு எழுந்தருளியவாறே இரண்டடி ஒய்யார நடையிட்டு தன்னுடைய பரத்வத்தை வெளிப்படுத்துகிறார்.

9) ஸ்ரீரங்கநாதன்தான் வாமன, திருவிக்ரம, வராஹ அவதாரங்களை எடுத்தவன் என்பதை இந்தப் புறப்பாடு உணர்த்துகிறது.

10) மேலைப்படியில் ஸ்தலத்தார்களுக்கும், தீர்த்த மரியாதை உரிமையுடையோர்க்கும் மரியாதைகள் நடை பெறும். மேலைப்படியை விட்டு நம்பெருமாள் இறங்கியபிறகு உத்தமநம்பிக்கும் தேவஸ்தான அதிகாரிகளுக்கும் சந்தன உருண்டை ஸாதிக்கப்படும். இந்தச் செயல் மூலம் அவர்கள் ஸ்ரீரங்கநாதனுடைய கைங்கர்யத்தைச் சரிவரச் செய்வ தாகப் பிரமாணம் செய்து கொடுக்கிறார்கள்.

11) ஸேனை முதலியாருக்கு மரியாதைகள் ஆனபிறகு, கிளிமண்டபத்தில் படியேற்ற ஸேவையாகும். அப்போது அரையர்கள் தாளமிசைப்பர். இந்தப் படியேற்றம் ஸுஷும்நா நாடியில் குண்டலிநீ சக்தி ஆறு ஆதாரங்களையும் கடந்து ஸஹஸ்ரார சக்ரம் போய்ச் சேருவதைக் குறிக்கிறது. ஆறாவது ஏழாவது படிகளில் நம்பெருமாள் ஒரு புறமிருந்து, மற்றொருபுறம் திரும்பி ஸேவை சாதிப்பதால் திருமங்கையாழ்வார் பாசுரமாகிய ‘‘நீணிலாமுற்றத்து நின்றிவள் நோக்கினாள் காணுமோ கண்ணபுரமென்று காட்டினாள்’’ (பெரியதிருமொழி 8-2-2)என்பதின் அர்த்தம் குறிப்பிட்டுக் காட்டப்படுகிறது.

12) சுரதாணி எனப்படும் துலுக்கநாச்சியார் ஸந்நிதிக்கு எதிரில் படியேற்ற ஸேவை ஸாதித்து, அரையர்கள் கொண்டாட்டமானபிறகு, அர்ஜுன மண்டபத்திற்கு நம்பெருமாள் எழுந்தருளியிருப்பார். திருப் பல்லாண்டில் ‘‘பல்லாண்டு பல்லாண்டு’’, ‘‘அடியோமோடும்’’ ஆகிய 2 பாசுரங்களுக்கும்

அபிநயம் நடைபெறும்.

13) பெரியாழ்வார் திருமொழியிலிருந்து பாசுரங்கள் ஸேவிக்கப் பட்டு வெண்ணெய் விழுங்கி (பெரியாழ்வார் திருமொழி 2-9-1) பதிகம் ஈறாக மொத்தம் அன்றையதினம் 224 பாசுரங்கள் ஸேவிக்கப்படும். (திருப்பல்லாண்டு 12, பெரியாழ்வார் திருமொழி 212)

✸✸✸

## "பகல்பத்து 2-ஆம் திருநாள்"

1) இரண்டாம் திருநாளன்று முதல் திருநாள்போலே அனைத்து வைபவங்களும் நடைபெறும். இதில் அமைந்துள்ள ஒரே மாற்றம்-அரையர் ஸேவை பாசுரங்கள் மட்டும்தான்.

2) பெரியாழ்வார் திருமொழி (2-10) "துக்கச்சுழலை" என்று தொடங்கும் பாசுரம் தொடங்கி மொத்தம் 250 பாசுரங்கள் இன்று ஸேவிக்கப்படும். அவற்றில் ஆற்றிலிருந்து-(பெரியாழ்வார் திருமொழி 2-10-1) தன்னேராயிரம் (பெரியாழ்வார் திருமொழி 3-1) ஆகிய இரண்டு பாசுரங்களுக்கு அரையர் அபிநயம் மற்றும் வ்யாக்யானங்கள் ஸேவித்திடுவார்.

3) பகல்பத்து உத்ஸவம் முழுதும் நம்பெருமாள் நாளுக் கொருவிதமான கபாய் (அங்கி), அதன் மேல்பல விதமான திருவா பரணங்கள், கீரிடம் அல்லது குல்லாய், சவுரிமுடி, ராஜமுடி, இவை களையும் செங்கழுநீர், கதிர்ப்பச்சை, இவை கலந்த செண்டை பின்புறம் முடிச்சில் திருக்குழல் கற்றையாகவும் சாற்றிக் கொண்டு, மாலையையும் தரித்துக் கொண்டிருப்பார்.

4) நம்பெருமாள் ஸிம்மகதியில் எழுந்தருளி, சந்தன மண்டபத்திற்குள் வரும் முன்பு வேத்ரபாணிகளாகிய சாத்தாணிகள் கீழ்க்கண்ட கட்டியத்தைச் ஸேவிப்பர்.

*"ஸ்ரீயதிபுரந்தராபராவதாரபூத ஸ்ரீவரவரமுநி ஸமுபந்யஸ்த த்ராமிட
ப்ரஹ்மஸம்ஹிதா ஸஹஸ்ர ஶாகா வ்யாக்யாந ஶ்ரவண ப்ரகுணித பரமா
நந்த பாரவஶ்யப்ரக்யாபித ததாசார்யபாவ ரங்கேஶ்வரா! எச்சரிகை!
மன்னியசீர் மணவாளமாமுனி ஈடுரைப்பது கேட்டு
பின்னொரு ஸ்ரீசைலேச எனப் பேசுமரங்கா, எச்சரிகை!"*

5)நம்பெருமாள் மேலைப்படியைவிட்டு கீழே இறங்கி வடக்கு நோக்கி, எழுந்தருளியிருப்பார்.

6) அப்போது “இசையறியும் பெருமாள் கூட்டத்தார்” என்ற அருளப்பாடு ஸாதிக்கப்படும். அரையர்கள் தாளத்தோடு இசை பாடுவர்.

7) கிளி மண்டபத்தில் **சாரீயோம்** என்ற அருளப்பாடு ஸாதிக்கப்பட்டவுடன், நட்டு முட்டு வாத்யங்கள் முழுங்கும். ***(சாரீயோம் என்ற அருளப்பாடு “நல்ல குரல்வளம் படைத்த நட்டு வாங்கனை” நோக்கி கூறப்படுவதாகும். ஒரு காலத்தில் கிளிமண்டபத்தில் நம்பெருமாள் எழுந்தருளியவுடன் நட்டுவாங்கன் பாட வாத்யங்கள் முழங்க, தாஸிகள் நர்த்தனம் ஆடி வந்தனர். 1953ஆம் ஆண்டு தாஸிகள் ஒழிப்புச் சட்டத்தின் விளைவாக இத்தகையதொரு இசையுடன் கூடிய நர்த்தனம் நின்று போயிற்று.)***

8) துலுக்கநாச்சியார் ஸந்நிதிக்கு எதிரில் எழுந்தருளியிருக்கும் நம்பெருமாள் துலுக்கநாச்சியார்அனுப்பியருளிய தாம்பூலத்தைப் பெற்றுக்கொள்வார்.

9) நம்பெருமாள் அர்ஜுன மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும்போது கீழ்க் கண்டவாறு ஆழ்வார் ஆசார்யர்களுக்கு அருளப்பாடு ஸாதிக்கப்படும்.

திருநாளுடையபிரான், (நம்மாழ்வார்) கலியன், ராமானுசன், பட்டர்பிரான், மதுரகவி, பொய்கை, பூதம், பேயார், சேரன், பாணன், தொண்டரடிப்பொடி, மழிசை, நம்பி, ஆழ்வான், பிள்ளை லோகாசார்யருக்கு அருளப்பாடு என்று ஸ்தானீகர் ஸாதிப்பார்.

10) இரவு பத்தியுலாவும்போது **சாரீயோம்** என்று அருளப்பாடு ஆகும். அப்போது நம்பெருமாள் யாகசாலை மண்டபம் வரை ஒய்யார நடையில் ஒரு யானை போல நடந்து செல்வார். இதற்கு கஜகதி என்று பெயர்.

✸✸✸

## “பகல்பத்து 3-ஆம் திருநாள்”

1) இன்றையதினம் அரையர் ஸேவையில் பெரியாழ்வார் திருமொழி இறுதிப் பதிகமான (5-4) சென்னியோங்கு பதிகம் மற்றும் நாச்சியார் திருமொழியில் 12ஆம் பதிகம் ஈறாக (மற்றிருந்தீர்கட்கு பதிகம் வரை) ஸேவிக்கப்படும்.

2) சென்னியோங்கு (பெரியாழ்வார் திருமொழி 5-4)

மார்கழித்திங்கள் (திருப்பாவை-1) இரண்டுக்கும் அபிநய வ்யாக்யானங்கள். மார்கழித் திங்களுக்கு வ்யாக்யானமாகும்போது கோஷ்டியார் நின்று கொண்டிருப்பர்.

3) சென்னியோங்கு-என்பதற்கு அபிநய வ்யாக்யானங்களாகி, அபிநயம் முன்னதாகவும், பாசுரம் பின்னதாகவும் அந்தத் திருமொழி முழுதும் ஸேவிக்கப்படும். 7-ஆம் பாட்டில், "திருப்பொலிந்த சேவடியென் சென்னிமேல் பொறித்தாய்" என்பது வரைக்கும் ஸேவித்து நிறுத்தி, நம்பெருமாள் திருவடிகள் தலைமேல் ஸ்தாபிக்கப் பெற்ற பெரியாழ்வார் பெற்றபேறு எல்லாருக்கும் கிடைக்குமாறு அரையர் நம்பெருமாளுடைய திருவடிகளைத் தம் சிரசில் தரித்து வந்து, ஆழ்வாராசாரியர்கள், கோஷ்டிக்கும், மற்றையோருக்கும் ஸாதிப்பார். அரையர் இன்று தீர்த்தம் ஸாதிப்பதில்லை.

4) மார்கழித்திங்கள் வ்யாக்யானம் பூர்த்தியானதும், ஆண்டாளுடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்து "கோயிலண்ணா்", "திருப்பாவை ஜீயர்" என்று ப்ரஸித்தி பெற்ற உடையவர் ஸந்நிதி யிலிருந்து அரையருக்கு இன்று பஹுமானம் அனுப்பப்படும். திருப்பாவை பிரபந்தத்துக்கு ஏற்பட்ட விட்டவன் விழுக்காடு இன்று உடையவர் ஸந்நிதிக்கே அனுப்பப்படும்.

5) **ஸ்தோத்ரபாட கோஷ்டி:** ஆழ்வாராசாரியர்கள் ஸ்ரீசட கோபம் பெற்றுக் கொண்டு உத்தர தினசரியா, பராங்குச பஞ்ச விம்சதி, நக்ஷத்ரமாலிகா முதலான ஸ்தோத்ர பாடகோஷ்டியோடு மண்டபத் திலிருந்து புறப்பட்டு, நம்மாழ்வார் ஸன்னிதிக்குப் போவார்கள். நம்மாழ்வார் மாத்திரம் ஸந்நிதிக்குள் போய் ஆஸ்தானத்தில் எழுந்தருளுவார். வெளியே இருக்கும் மற்றவர் களுக்கு மதுரகவிகள் செய்து வைக்கும் பாவனையாக கற்பூர ஆரத்தி நடக்கும்.

6) நம்மாழ்வாரின் மாலையிலொன்றைப் பெரியாழ்வாருக்கு ஸாதித்த பிறகு, எல்லாருக்கும் நம்மாழ்வாரின் பாதுகையான மதுரகவி ஸாதிக்கப்படும்.

7) உடனே பெரியாழ்வார் உடையவர், கூரத்தாழ்வான்,

பிள்ளைலோகாசார்யர் இந்நால்வர் தவிர இதரர்கள் தத்தம் ஸந்நிதிக்கு எழுந்தருளுவார்கள்.

8) இந்நால்வரும் புறப்பட்டு, சொக்கப்பனை வாசலுக்கு வெளியே கிழக்கு முகமாயிருக்கும் பெரியாழ்வார் எதிரில், கூரத்தாழ்வான் பிள்ளைலோகாசார்யர்களுக்கு மத்தியில், மேற்கு முகமாயிருக்கும் உடையவருக்கு, நம்மாழ்வார் தமக்கு ஸாதித்த மாலையை ஸாதித்த பிறகு தம்முடைய ஸந்நிதிக்கு எழுந்தருளுவார்.

9) உடையவர் கிழக்குமுகமாகத் திரும்பி, தமக்கு முதலில் நம்மாழ்வாரும் இப்பொழுது பெரியாழ்வாரும் ஸாதித்த மாலைகளில் ஒன்றைக் கூரத்தாழ்வானுக்கு ஸாதித்து அவரை அனுப்பி வைத்திடுவார்.

10) மற்றொரு மாலையைப் பிள்ளைலோகாசாரியருக்கு ஸாதித்து அவரோடும், ஸ்தோத்ரபாட கோஷ்டியோடும் புறப்பட்டு, தம்முடைய ஸந்நிதிக்கு எழுந்தருளுவார்.

11) உடையவர் ஆஸ்தானத்தில் எழுந்தருளின பிறகு, கோஷ்டிக்கு தீர்த்த ப்ரஸாத வினியோகம் ஆகும். இதற்கும் பெருமாள் அன்றைய உபயகாரர்களுக்கு ஸேவை மரியாதை அனுக்ரஹித்து, தோளுக்கினியானில் எழுந்தருளி, உடையவர் கோஷ்டியிலிருந்து ஸேவார்த்திகளும் கைங்கர்ய பரர்களும் வருவதற்காகக் காத்திருப்பார்.

## "பகல்பத்து 4-ஆம் திருநாள்"

1) இன்று 2 அரையர் ஸேவைகள் நடைபெறும். நாச்சியார் திருமொழி "கண்ணன் என்னும் கருந்தெய்வம்" (13ஆம் திருமொழி) தொடங்கி நாச்சியார் திருமொழி 14ஆம் பதிகம் (20) ஸேவிக்கப் பெற்று குலசேகராழ்வார் அருளிச் செய்த பெருமாள் திருமொழி 105 பாசுரங்கள் ஸேவிக்கப்படும். அதன்பிறகு திருமழிசையாழ்வார் அருளிச் செய்த திருச்சந்தவிருத்தம் (120 பாசுரங்கள்) ஆக மொத்தம் இன்று 245 பாசுரங்கள் ஸேவிக்கப்படும்.

2) "கண்ணனென்னும்" (நாச்சியார் திருமொழி 13-1) "இருளிரிய" (பெருமாள் திருமொழி (முதல் பதிகம்) இரண்டுக்கும் அபிநய வ்யாக்யானங்கள். திருச்சந்தவிருத்தத்தில் ஒரு பாட்டுக்கும் வ்யாக்யானம் ஸேவிக்கப் படுவதில்லை.

3) **முதல் அரையர் ஸேவை:** "கஞ்சைக் காய்ந்த கருவில்லி"

(நாச்சியார் திருமொழி 13-3) என்ற பாசுரத்தில் கஞ்சனைப்பற்றிய குறிப்பு வரப்பெற்றதால் கம்ஸவதத்தை நடிப்பதற்காகவே அத்திருமொழிப் பாட்டுக்கள் எட்டினை விட்டு, மற்றைப் பாட்டுகள் ஸேவிக்கப்படும்.

4) "இருளிரிய" பெருமாள் திருமொழி முதல் பாட்டு வ்யாக் யானம் பூர்த்தியானதும், அரையருக்குக் குலசேகராழ்வார் ஸந்நிதி யிலிருந்து பஹுமானம் வரும்.

**இரண்டாம் அரையர் ஸேவை: கம்ஸவதம்**

கம்ஸவத விஷயமான **தம்பிரான்படி** ஸேவித்து, கம்ஸவதத்தை நடித்து, அத்திருமொழியில் முன்பு நிறுத்தின எட்டுப்பாசுரங்களும் ஸேவிக்கப்படும்.

6) பண்டைய காலங்களில் அரையர்கள் ஆழ்வார் பாசுரங் களைப் பாடி, மகிழ்வித்த போது கொண்ட அனுபவங்களை நம்பிள்ளை என்னும் உரையாசிரியர் தமது திருவாய்மொழி உரையில் குறிப்பிட்டு உள்ளார்.

7) தற்போது சில குறிப்பிட்ட பாசுரங்களுக்கு மட்டுமே அபிநயமும் விரிவுரையும் ஸேவிக்கப்பட்டு வருகிறது. ஆனால் பூர்வாசார்யர்கள் காலத்தில் அவர்கள் நியமித்தருளிய பாசுரங்களுக்கு மட்டுமே அபிநயம் நடைபெற்றது.

8) ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்ய வேண்டும் நாம்" என்ற பாடலை இசைக்கும் போதெல்லாம் ஒழிவில் காலமெல்லாம் என்ற தொடரையே நெடும்போது பாடி மேல் போகமாட்டாதே. அவ்வள விலேயே தலைக்கட்டிப் போவராம். நம்மாழ்வார் எம்பெருமானுக்குச் செய்யப் பாரிக்கும் தொண்டின் நீட்சியை நினைத்துப் பார்த்த அரையர் மனமுருகிவிட்டார். (3-3-1. ஈடு.)

9) பிள்ளைதிருநறையூர் அரையர் திருவாய்மொழியை அனுபவிக்கத் தொடங்கும் போதே ஆழங்காற்பட்டு மனமுருகிக் கண்ணீர் மல்கி நிற்பாராம். (6-7-1. ஈடு) இந்நிலையை நஞ்சீயர் கண்டு வியந்து தம் சீடரான நம்பிள்ளையிடம் பிற்காலத்தில் கூறி மகிழ்ந்து இருக்கிறார்.

10) ஒருமுறை திருவாய்மொழித் திருநாளில் திருவரங்கப்

பெருமாள் அரையர் ''கடுவினை களையலாகும்'' என்ற பாசுரத்தை மிக வுருக்கமாக ஆளவந்தாரை நோக்கிப் பாடினார். அப்பாசுரத்தின் ஈற்றடியான,

**படைமுடை யரவில்பள்ளி பயின்றவன் பாதம்காண**
**நடமினோ நமர்கள் உள்ளீர் நாம் எமக் கறியச்சொன்னோம்**

(திருவாய்மொழி 10-2-8)

என்பனவற்றைக் கேட்டதும் ஆளவந்தார் நமக்கு ஆழ்வா ரோடே ஒரு உறவு உண்டாகவேணும் என்று அப்போதே தம் சீடர்களான முதலிகளுடன் திருவனந்தபுரம் பயணப்பட்டாராம். அரையரின் இசையினை உற்றுக் கேட்டவுடன் ஆழ்வாரின் குறிப்பு பளிச்செனப்பட்டுச் சடக்கெனத் திருவனந்தபுரம் புறப்பட்டார் என்று தெரிகிறது. ✱✱✱

## ''பகல்பத்து 5-ஆம் திருநாள்''

1) இன்று அரையர் ஸேவையில் ''அரையர் திருவாராதனம்'' என்னும் நிகழ்ச்சி காணத்தகுந்ததாகும். இன்றைய தினம் திருமாலை 45 பாசுரங்கள், திருப்பள்ளியெழுச்சி 10 பாசுரங்கள், அதன்பிறகு அமலனாதிபிரான் 10 பாசுரங்கள் ஆகமொத்தம் 65 பாசுரங்கள் ஸேவிக்கப்படும்.

2) திருமாலையில் ''காவலிற்புலனை வைத்து'' என்ற பாசுரத்திற்கும், ''அமலனாதிபிரானில்'' முதற் பாட்டிற்கும் அபிநய வ்யாக்யானங்கள் ஸேவிக்கப்படும்.

3) திருமாலை 2ஆம் பாட்டு தொடங்கி 6ஆம் பாட்டு மூன்றாவது பாதம் ''அரங்கனார்க்கு ஆட்செய்யாதே'' என்ற சொற்றொடர்வரை அபிநயம் மட்டும் நடைபெறும்.

4) ''அரங்கனார்க்கு ஆட்செய்யாதே'' என்ற பாசுரச் சொற் றொடரை அபிநயித்த பிறகு நம்பெருமாளுடைய திருவத்யய னோத்ஸவ வைபவமனைத்தையும் புறப்பாடு, திருவாராதனம், அருளப்பாடு, வேதவிண்ணப்பம் ஆகிய நிகழ்ச்சிகளை அபிநயித்த பிறகு, மற்றைய பாசுரங்கள் ஸேவிக்கப்படும்.

5) இந்தத் திருக்கோயிலில் ஒருநாள் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், உத்ஸவ காலங்களில் நம்பெருமாள் புறப்பாடு

காண்பதற்கு முன்பு நடைபெறும் நிகழ்ச்சிகளையும் அரையர்கள் தங்களுடைய தாளமான நாத முனிகளையே நம்பெருமாளாகப் பாவித்து, இந்த நிகழ்ச்சியை நடத்திடுவர்.

6) நாடகக்கலை மூலம் நிகழ்ச்சிகளை விவரித்திட இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் வல்லு நர்களான அரையர்களைக் கொண்டு அனைவரும் கண்டு களித்திட ஏற்படுத்தப்பட்ட நிகழ்ச்சி யாகும் இது.

7) திருப்பள்ளியெழுச்சியில் எந்தவொரு பாட்டுக்கும் அபிநயமோ, அல்லது விரிவுரையோ ஸேவிப்பதில்லை.

8) தொண்டரடிப்பொடியாழ்வார் ஸந்நிதியிலிருந்து அரையருக்கு மரியாதைகள் இன்று செய்விக்கப்படும்.

9) மாலை நம்பெருமாள் அர்ஜுன மண்டபத்தில் இருந்து புறப்பாடு கண்டருளி, மேலைப்படி வழியாக சந்தன மண்டபத்தினுள் எழுந்தருளிய பிறகு, 1953ஆம் ஆண்டுக்கு முன்பு திருமடைப்பள்ளி யிலிருந்து தாஸிகள் ‘‘தட்டி’’ எனப்படும் தடித்த திரி இரண்டில் தீபத்தினைக் கொண்டு வருவார்கள். தற்போது கோயில் கைங்கர்ய பரர்கள் இதனைக் கொண்டு வருகிறார்கள்.

10) ஸ்தானீகர் பெரியகோயில் நம்பி என்று அருளப்பாடு ஸாதிப்பார். திருவரங்கத்தமுதனார் வந்து திருவந்திக்காப்பு கட்டியம் சொல்லுவார். (இந்த அருளப்பாடு இப்போது இல்லை. அதற்குக் காரணம் பெரிய கோயில் நம்பி எனப்படும் திருவரங்கத்தமுதனார் வம்சத்தவர்கள் திருக்கோயில் கைங்கர்யத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை.)

11) ‘‘மங்களவாத்யம்’’ என்று அருளப்பாடானதும் நட்டு முட்டு முழங்கும். கடதீபம் ஏற்றப்பட்டுக் கீழே வைக்கப்படும்.

12) ‘‘சாமானாயிந்தே சாமா’’ என்று ஸ்தானீகர் சொல்ல, ‘‘வைஷ்ணவன் பேசாதே சத்து’’ (பேசாதே சப்தமிடாதே என்பதன் மரூஉ) என்பான்.

13) அர்ச்சகர் பெருமாளுக்கு அர்க்யபாத்யம் ஸமர்ப்பித்து,

“திருவடி விளக்குவதேல்” என்றதும், உட்சாத்தினால் பெருமாளுக்குத் திருமுகத்தையும், திருவடியையும் துடைத்திடுவார்.

14) “திருமணி பரிமாறுவான்” என்றதும், கீழே இருக்கும் கடதீபத்தினால் திருவந்திக்காப்பு ஆகும்.

15) பிறகு நம்பெருமாள் ஸர்ப்ப கதியில் உள்ளே கர்ப்ப க்ருஹத்தினுள் எழுந்தருளுவார்.

### “பகல்பத்து 6-ஆம் திருநாள்”

1) இன்று கண்ணிநுண்சிறுத்தாம்பு 11பாசுரங்களும், இரண்டாம் ஆயிரத்தில் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரியதிருமொழியில் 249 பாசுரங்களும் ஆக மொத்தம் 260 பாசுரங்கள் ஸேவிக்கப்படும்.

2) பெரியதிருமொழியில் 3ஆம்திருமொழி 6ஆம் பதிகம் “தூவிரிய மலர் உழக்கி” ஈறாக (பெரிய திருமொழிப்பாசுரங்கள் 249 இன்று ஸேவிக்கப்படும்.)

3) கண்ணிநுண்சிறுத்தாம்பு “வாடினேன் வாடி” (பெரிய திருமொழி 1-1-1) இரண்டுக்கும் அபிநய வ்யாக்யானங்கள் அரையர் களால் ஸேவிக்கப்படும்.

4) கண்ணிநுண்சிறுத்தாம்பில் ஈடுபட்ட ஸ்ரீமணவாள மாமுனிகள் இன்று அரையருக்கு பஹுமானம் அனுப்புவார். “வாடினேன் வாடி” அபிநயத்தில் கோஷ்டி நின்று கொண்டிருக்கும்.

**அத்யயனோத்ஸவம் பற்றிய சில சிறப்புச் செய்திகள்:-**

5) ஸ்ரீமணவாளமாமுனிகள் ஸ்ரீரங்கநாதனுக்கு வ்யாக் யானங்களை அருளிச்செய்தது முதல், வ்யாக்யானங் களும் அரையர் ஸேவையில் ஸேவிக்கப்படுகின்றன. ஸ்ரீமணவாள மாமுனிகளுக்கு முற்பட்ட காலத்தில் தம்பிரான்படி வ்யாக்யானமும், ஆசார்யர்கள் நியமித்தருளிய பாசுரங்களுக்கு மட்டும் அபிநயங்களும் நடைபெற்று வந்தன.

6) அரையர் ஸந்ததியினருக்கு **தம்பிரான்மார்** என்ற பெயர் உண்டு. அவர்கள் அருளிச் செய்த விரிவுரைகளே நெடுநாளாக ஸேவிக்கப்பட்டு வந்தபோதிலும், திருவாய்மொழிக்கு நம்பிள்ளை

ஈடு, மற்றைய திவ்யப்பிரபந்தங்களுக்குப் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம், பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம் கிடைக்காத பெரியாழ்வார்திருமொழி சில பாசுரங்களுக்கு ஸ்ரீமணவாளமாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம் ஆக இந்த மூன்று வ்யாக்யானங்களே ஸ்ரீகோசத்தைப் பார்க்காமல், வரிதவறாமல் அரையர்களால் ஸேவிக்கப்பட்டு வருகிறது. இந்த நிகழ்ச்சி ஸ்ரீமணவாளமாமுனிகள் நம்பெருமாளுக்கு அவற்றைக் ''காலக்ஷேபம்'' ஸாதித்த நிகழ்ச்சியை நினைவூட்டுவதாகும்.

7) இந்த மூன்று வ்யாக்யானங்களுடன், தம்பிரான்மார் வ்யாக்யானமும் சேர்த்து ஸேவிக்கப்படுகிறது. இதர வ்யாக்யானங் களுக்கு நம்பெருமாள் ஸந்நிதியில் பிரவேசமில்லை.

8) பகல்பத்து, இராப்பத்து திருநாட்களில் அரையர் ஸேவையில் அபிநயம் பூர்த்தியானதும் வ்யாக் யானத்துக்கு முன்பாக நம்பெருமாள் நியமனம் பெற்று, ஆழ்வார்களிடம் வந்து ஆழ்வார் கொண்டாட்டம் ஸேவித்து நியமனம் பெற்றவுடன் நம்மாழ்வார், எம்பெருமானார் மாலைகள் படிகளைந்து இரண்டு அரையர்களுக்கும் ஸாதிக்கப்படுகிறது.

9) அரையர் ஸேவை பூர்த்தியானதும், கோஷ்டியிலிருக்கும் அத்யாபகர்கள் நம்பெருமாளைச் சென்று ஸேவிப்பார்கள். அர்ச்சகர் அவர்களுக்கு ஸ்ரீசடகோபம் ஸாதிப்பார். அலங்காரம் எனப்படும் திருப் பணியாரங்களும், தோசை ப்ரஸாதங்களும் எழுந்தருளப் பண்ணப் பட்ட பிறகு திரை ஸமர்ப் பிக்கப்படும்.

10) நம்பெருமாளுக்கு அமுது கண்டருளியபிறகு ஆழ்வாரா சாரியர்களுக்கு அமுது செய்விக்கப்படும். அருளப்பாடு க்ரமத்தி லேயே ஆழ்வாராசார்யர்களுக்கு அமுது செய்விப்பது நடைபெறும். ஆனால் உடையவர் கூரத்தாழ்வான், பிள்ளைலோகாசாரியர் இவர் களுக்கு மட்டும் திருக்கச்சி நம்பிக்குப் பிறகு, அமுது செய்விக்கப் படும். நம்மாழ்வார் அமுது செய்த ப்ரஸாதம் அரையர்களுக்கு உரிய தாகையாலே, அவர்களின் திருமாளிகைக்கு அது அனுப்பி வைக்கப்படும்.

### ''பகல்பத்து 7-ஆம் திருநாள்''

1) இன்று 2 அரையர் ஸேவைகள் நடைபெறும்.

2) பெரியதிருமொழி ''தூவிரிய மலர் உழக்கி'' (பெரிய

திருமொழி 3-6) பதிகம் தொடங்கி, ‘‘கைம்மான மழகளிற்றை கடல் கிடந்த கருமணியை’’ (பெரியதிருமொழி 5-6) பதிகம் ஈறாக மொத்தம் 210 பாசுரங்க்ள் இன்று ஸேவிக்கப்படும்.

3) **அரையர் முதல் ஸேவை:** ‘‘தூவிரிய மலருழக்கி’’ பாசுரத்திற்கு(பெரிய திருமொழி 3-6) அபிநய வ்யாக்யானங்களாகி, அத்திருமொழி 5-ஆம் பாட்டில் ‘‘மண்ணளந்த தாளாளா’’ பாசுர சொற்றொடருக்கு இணங்க வாமனாவதாரத்தை நடிப்பதற்காக அத்திரு மொழியில் அமைந்துள்ள மேல் பாட்டுக்களை ஸேவியாமல், மற்றைத் திருமொழிப் பாசுரங்களை ஸேவிப்பர்.

4) **அரையர் இரண்டாம் ஸேவை வாமன அவதாரம்:** தம்பிரான்படி ஸேவித்து, வாமனாவதார வைபவத்தை நடித்துக் காட்டியபிறகு, அத்திருமொழியில் முன்பு நிறுத்தின பாட்டுக்களை ஸேவிப்பர்.

***சில சிறப்புச்செய்திகள்:-***

5) ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களில் ஸ்ரீபராசரபட்டரால் திருத்திப் பணி கொள்ளப்பட்ட நஞ்சீயர் என்பார் திருவரங்கத்தில் 36 ஆண்டுகள் ஆசார்ய பீடத்தில் எழுந்தருளியிருந்தார்.

6) இன்றையதினம் அபிநயத்தோடு ஸேவிக்கப்படும் ‘‘தூவிரிய மலருழக்கி’’ பாசுரத்தைப் பற்றிய நிகழ்வு ஒன்று நம்பிள்ளையின் சிஷ்யரான பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்த பெரியதிருமொழி விரிவுரையில் காணப்படுகிறது.

7) நஞ்சீயர் மிகவும் உடல் நலிவுற்றுக் கிடந்தபோது அவரைப் பார்க்க வந்த அவருடைய சீடரான **பெற்றி** என்பவர் ‘‘இப்போது தேவரீருக்கு என்ன வேண்டும்?’’என்று கேட்க, அதற்கு நஞ்சீயர் ‘‘திருமங்கையாழ்வார் அருளிச் செய்த ‘‘**தூவிரிய மலருழக்கி**’’ என்கிற பதிகத்தைக் காதாரக் கேட்க வேண்டும் என்றும்,

8) மேலும் நம்பெருமாள் எழுந்தருளப் பின்னும் முன்னும் சேவிக்க வேண்டும்’’ என்றும் தம் விருப்பத்தைத் தெரிவித்தார்.

9) அவ்வாறே நம்பெருமாள் நஞ்சீயர் மடத்திற்கு எழுந்தருளி ஸேவை சாதித்தார். ‘‘வரந்தரும்பெருமாள்’’ அரையர் என்பவரை அழைத்து வந்து, ‘‘தூவிரியமலருழக்கி’’ என்கிற திருமொழியை ஸேவிக்கச் செய்ய, அதைக் கேட்டுக் கொண்டிருந்த நஞ்சீயர் ‘‘தானாக நினையாமல் தன்னினைந்து நைவேற்கு ஓர் மீனாய கொடி நெடுவேள் செய்ய மெலிவேனோ’’ (எம்பெருமான் தானாகவே

என்னை நினையாமல் போனாலும், அவனையே நினைத்துக் கொண்டு மனம் தளர்ந்திருக்கின்ற என்னை மன்மதன் துன்பப்படுத்த நான் இப்படி இளைத்துப் போவேனோ?) என்ற நான்காம் பாசுரத்தை அரையர் பாடியபோது, உடல் நலிவுறுவதற்கு முன்பே எம்பெருமான் வந்து உதவாமல் போனாலும், அந்த நோயை நீக்கவாவது வந்தாலாகாதோ? என்றருளிச் செய்து மிகவும் தளர்ந்து வருந்தினாராம்.

10) மார்கழி முதல்நாள் பெரியபெருமாள் திருப்பள்ளி யெழுச்சி கண்டருளி, ஆராதனங்களுக்குப் பிறகு அமுது செய்விக்கப் படும்.

11) உடையவர் ஸந்நிதிக்காரர் உபகாரங்களோடு வந்து பெரியபெருமாளை ஸேவிப்பார்.

12) பெரியபெருமாள் அமுது செய்த ப்ரஸாதத்தை அர்ச்சகர், ஸ்தானீகர், மணியகாரர் முதலான பெரியபெருமாள் பரிகரத்தார் உடையவர் ஸந்நிதிக்கு மேளதாள வைபவத்தோடு கொண்டுபோய், உடையவருக்கு அமுது செய்விப்பார்கள்.

13) அங்கே கோஷ்டி நடக்கும். ஆண்டாள் மார்கழி வ்ரதமனுஷ்டித்த விவரத்தைத் தெரிவிக்கும் திருப்பாவை திவ்யப் பிரபந்தத்தை அழகியமணவாளனுக்கு தனுர்மாஸ திருவாராதனத்தில் சேர்த்தவர் உடையவர். ஆகையால் திருப்பள்ளியெழுச்சி என்னும் பேரால் தனுர்மாஸம் முழுவதும் பெரியபெருமாள் தாம் அமுது செய்யும் ப்ரஸாதத்தை தினந்தோறும் உடையவருக்கு அனுப்புகிறார். முதல் நாள் ப்ரஸாதம் மாத்திரம் அர்ச்சகர் முதலானோரால் உடையவருக்கு அமுது செய்விக்கப்படும்.

✸✸✸

## "பகல்பத்து 8-ஆம் திருநாள்"

1) இன்றும் இரண்டு அரையர் ஸேவைகள் நடைபெறும். "பண்டை நான்மறை" (பெரிய திருமொழி 5-7) பதிகம் தொடங்கி "சிலையிலங்கு பொன்னாழி" (பெரியதிருமொழி 8-1) பதிகம் ஈறாக 250 பாட்டுக்கள் ஸேவிக்கப்படும்.

2) **முதல் அரையர் ஸேவை:** "பண்டை நான்மறைக்கு" அபிநய வ்யாக்யானங்களாகி "ஆராமம் சூழ்ந்த அரங்கம்" "அணி பொழில் சூழ்ந்த அரங்கம்" என்று திவ்யப்பிரபந்தத்தில்

அரங்கமென்று முடியும் வாக்யங்கள் 64 ஸேவிக்கப்படும்.

3) “அரங்கமாநகர் அமர்ந்தானே” இந்த வரிக்கு மட்டும் அனேகம் தடவை அபிநயம் நடைபெறும்.

4) “மாயிருங்குன்ற மொன்று மத்தாக” என்று திருப்பாற்கடலைக் கடைந்த நிகழ்ச்சியை இந்தப் பாசுரச் சொற்றொடர் நினைவூட்டுவதால் இந்த இடத்தில் அம்ருதமதனத்தை நடிப்பதற்காகவே அத்திருமொழிப் பாட்டுக்களை நிறுத்தி மற்றைத் திருமொழிப் பாசுரங்களை ஸேவிப்பர்.

5) **இரண்டாம் அரையர் ஸேவை:** தம்பிரான்படி ஸேவித்து, அம்ருதமதனத்தை நடித்து, அத்திருமொழியில் நிறுத்தப்பட்ட பாட்டுக்களை அரையர்கள் ஸேவிப்பர்.

**அரையர்களைப் பற்றிய சில சிறப்புச் செய்திகள்:-**

6) திருமால் திருக்கோயில்களில் நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி இறைவன் திருவோலக்கத்தில் இசையுடன் ஓதப்பட்டது.

7) தமிழ்ப்பண்ணிசையில் வல்லுநராய்த் திருவாய்மொழியை இசைத்தவர்கள், “திருவாய்மொழி விண்ணப்பஞ் செய்வார்” என்று கௌரவித்து அழைக்கப்பட்டனர்.

8) மதுரகவியாழ்வாரே திருவரங்கத்தில் பெரியபெருமாள் முன்பாகத் திருவாய்மொழியை இசையுடன் விண்ணப்பித்து “திருவாய்மொழி விண்ணப்பஞ் செய்வார்” என்ற விருதினை முதன்முதலில் திருவரங்கரால் வழங்கப் பெற்றார் என்று கோயிலொழுகு வாயிலாக அறியப்படுகிறது.

9) இவ்விருதுப் பெயர் நம்மாழ்வாரின் திருவிருத்தத்தில் “அடியேன் செய்யும் விண்ணப்பமே” என்ற தொடரிலிருந்து உருவாக்கப் பட்டிருக்கலாம். (திருவிருத்தம்-1)

10) மதுரகவியாழ்வாருக்குப் பிறகு நாதமுனிகளும் அவர்தம் மருமக்கள் வழியினரும் திருவாய்மொழி விண்ணப்பஞ் செய்வார்களாகத் திருவரங்கம் திருக்கோயிலில் தொடர்ந்து பணியாற்றி வந்தார்கள். இன்றும் பணியாற்றி வருகிறார்கள்.

11) இவ்வகைத் தொண்டும் இடையறாது நிகழ மன்னர்கள் அவர்களது அரசாட்சியில் நிவந்தங்களும் பொற்கழஞ்சுகளும் வழங்கி வந்தார்கள்.

12) முதலாம் குலோத்துங்க சோழன் (கி.பி. 1070-1122.) தன் பதினைந்தாம் ஆட்சியாண்டில் திருவரங்கம் பெரியகோயிலில் திருவாய்மொழி விண்ணப்பஞ் செய்ய ஐம்பது பொற்காசுகள் வழங்கியிருக்கிறான். (A.R. No.61/1892)

13) திருவரங்கம் பெரியகோயிலில் விண்ணப்பஞ் செய்வார்கள் எண்ணிக்கையிற் பலராயிருந்தனர். (5-10-6. ஈடு)

14) இவர்கள் திருவாய்மொழி மட்டுமின்றி மற்றைய பிரபந்தங்களையும் இசையுடன் விண்ணப்பித்து வந்தனர்.

15) திருவாய்மொழித் திருநாளின் இறுதியான தீர்த்த வாரி யன்று குலசேகராழ்வாரின் பெருமாள் திருமொழி "தேட்டறும் திறல் தேனினை" 2ஆம் பதிகம் இசையுடன் அபிநயிக்கப் பட்டிருக்கிறது. (A.R. No.61/1892)

✸✸✸

## "பகல்பத்து 9-ஆம் திருநாள்"

1) இன்று இரண்டு அரையர் ஸேவைகள் நடைபெறும்.

2) "தெள்ளியீர் தேவர்க்கும் தேவர்திருத்தக்கீர்" (பெரிய திருமொழி 8-2) என்ற பதிகம் தொடங்கி பெரியதிருமொழி 10-1 பதிகமான "ஒருநல்சுற்றம்" ஈறாக 300 பாட்டுக்கள் ஸேவிக்கப்படும்.

3) **முதல் ஸேவை:** "தெள்ளியீர் தேவர்க்கும்" என்பதற்கு அபிநய வ்யாக்யானங்கள்.

4) **இரண்டாம் ஸேவை:** அலங்காரம் அமுது செய்த பிறகு, "குறத்துக்கு அருளப்பாடு" என்று முத்துக்குறிக்கு அருளப்பாடு ஸாதிக்கப்படும்.

5) நாளை வரும் திருநெடுந்தாண்டகப் பாசுரம் முதல் பாட்டு "மின்னுருவாய்" என்னும் பாசுரத்திற்கு அபிநய வ்யாக்யானங்கள். முதற் பாட்டுக்குப் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம் ஆகியவை இன்றே ஸேவிக்கப்படும்.

6) திருநெடுந்தாண்டகம் 11 பாட்டுக்களுக்கும் பதினொன் றாவதில் கட்டுவிச்சி குறி சொல்வது தம்பிரான்படி யிலிருந்து ஸேவிக்கப்படும்.

7) நாளை இரண்டாம் ஸேவையில் முத்துக்குறி, ராவண வதம் இரண்டையும் வைத்துக் கொள்ள நேரம் இருக்காததால், இன்று முத்துக்குறி நடைபெறும்.

8) முத்துக்குறிக்காக அரையர் இன்று தீர்த்தம், சடகோபம்

ஸாதிப்பார்.

9) ஆற்றாமையினால் ''முதலானாய்'' (திருநெடுந்தாண் டகம்-10) என்றார் திருமங்கையாழ்வார்; அந்த உள்ள வெப்பத்தால் ஆணாயிருந்த ஆழ்வார் பெண் நிலையை அடைந்தார். அந்தப் பெண்ணான நிலையிலும் தம் வாயாலே கூப்பிடுவதற்கு உரிய தகுதி யற்று மயக்கமுறவே, மற்றவர் வாயாலே கூப்பிட்டுப் பேசும் படியாய் அமைந்துள்ளது இந்தப் பாசுரம்.

10) மேலே பத்துப் பாசுரங்களில் அஃதாவது இயற்கைப் புணர்ச்சியில் எம்பெருமானாகிய தலைவனைக் கூடிப் பின் பிரிவாற்றா தாளாகிய தலைவி ஒருத்தியிடம் மயக்கமும் தெளிவும் முதலிய நிலை வேறுபாடுகள் ஒருகால் தோன்றுவனவாகவும், அவைதாம் முறை மாறியும் நிகழ, உறவினர் குழாத்தவரும் ''இந்நிலைகள் இவளுக்கு ஏற்றனவா? ஏலாதனவா?'' என்று முடிவு செய்து மனங்கொள்ள மாட்டாமல் குழம்பியிருக்க, தலைவிக்கு ஏற்பட்ட இந்நோயின் காரணம் அறியாமல் மருந்து வழங்கும் மருத்துவரும் மந்திரவாதிகளும் புகுந்து இவள் உடல் நலனுறப் பரிகாரம் செய்வதில் முனைய, அந்நிலையில் எம்பெருமானிடம் பெரிதும் ஈடுபாடுடைய கட்டுவிச்சி (குறத்தி) என்னும் குறி சொல்பவள், ''இவளுடைய நோயின் உண்மைக் காரணத்தை நீங்கள் யாரும் அறியவில்லை. இவளுக்கு வந்துள்ள இந்நோய் எம்பெருமான் காரணமாக வந்ததாகும் என்று உரைக்கும் நிகழ்ச்சியே முத்துக்குறி.

11) இஃது அவனாலேயே நீங்கவேண்டியதாகும்'' என்று கூற, கட்டுவிச்சி சொல்லிய வார்த்தைகளைக் கேட்ட திருத்தாயார், தம் மகள் உடல்நிலை பற்றி வினவ வந்தவர்களுக்கு, இப்பெண்ணினுடைய நிலையையும், கட்டுவிச்சி சொல்லுகிற வார்த்தையையும் சொல்லுகிற பாசுரத்தாலே இவ்வாழ்வார் தம் நிலையை அருளிச் செய்கிறார் இந்தப் பாட்டில்.

### அரையர்கள் பற்றிய சில குறிப்புகள்:-

12) திருவத்யயன உத்ஸவத்தில் ஆழ்வார் பாசுரங்களை இசையுடனும் அபிநயத்துடனும் விண்ணப்பிப்பவர்கள் அரையர்கள் என்று அழைக்கப்பட்டனர். அரையர் என்பது அரயர் என்ற சொல்லின் போலியாகும்.

13) விண்ணப்பஞ் செய்வார்களையும் அரையர்கள் என்றே சிறப்பித்தற்குக் காரணத்தைக் கோயிலொழுகு மூலமே அறிகிறோம்.

14) திருவாய்மொழியிசையில் நிகரற்ற தேர்ச்சி பெற்று

விளங்கிய தலைமை தோற்றவே அரையர்கள் என்று ஸ்ரீரங்கநாதனால் பாராட்டப் பெற்றனர். அத்தலைமை தோற்றவே தலையில் மகுடமாகப் பட்டுக்குல்லாய் அணிந்து கொள்ளும் உரிமையும் வழங்கப் பெற்றனர். திருவாய்மொழி விண்ணப்பஞ் செய்வார்களைக் குறிப்பிடும் போதெல்லாம் நம்பிள்ளை அவர்தம் இயற்பெயரையோ ஊர்ப் பெயரையோ அடுத்து அரையர் என்று சிறப்பித்து வழங்கத் தவறுவ தில்லை. அரையர் எண்மர் ஈட்டு உரையில் இடம் பெறுகின்றனர்.

✱✱✱

## “பகல்பத்து 10-ஆம் திருநாள்”

1) இன்று நம்பெருமாள் நாச்சியார் திருக்கோலத்தில் கர்ப்ப க்ருஹத்திலிருந்து புறப்பாடு கண்டருளுவார்.

2) இன்று இரண்டு அரையர் ஸேவைகள் நடைபெறும்.

3) பெரியதிருமொழி (10-2-1) “இரக்கமின்றி” என்ற பாசுரத்திற்கு அபிநயம் மற்றும் வ்யாக்யானம் ஸேவித்தபிறகு, பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம் பாசுரங்கள் ஸேவிக்கப் படும்.

4) இரண்டாம் அரையர் ஸேவையில் “ராவண வதத்திற்கு” அரையர்களுக்கு அருளப்பாடு சாதித்து, அவர்களுக்கு மரியாதை நடைபெறும்.

5) தம்பிரான்படி ஸேவித்து இராமாவதாரத்திலிருந்து இராவணவதம் முடிய நடிக்கப்படும்.

6) பிறகு, அரையர் உள்ளே போய் நம்பெருமாள் நாச்சியாராக ஸேவை ஸாதிப்பதால் “மாலாய் வந்தரங்கர் மணம் புணரும் நாச்சியார்” என்னும் கொண்டாட்டங்களைச் சொல்லி, திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டங்களின் கடைசிப்பாட்டு “குன்றமெடுத்து” (பெரியதிருமொழி 11-8-10) “வானவர் தங்கள் கோனும்” (திருக்குறுந்தாண்டகம்-20) “மின்னு மாமழை தவழும் மேகவண்ணா” (திருநெடுந்தாண்டகம்-30) சாற்றுமுறை செய்வார்.

7)இன்று வாழித்திருநாமத்தோடு மங்களமும் பாடப்படும்.

8) பெரியதிருமொழி சாற்றுமுறைக்காக அரையர் தீர்த்தம் சடகோபம் ஸாதிப்பார்.

9) அன்றையதினம் மாலை ஆழ்வார் ஆசார்யர்கள் கருட மண்டபத்தின் கீழ்ப்புறத்தில் எழுந்தருளி யிருப்பர்.

10) மாலையில் நம்பெருமாள் நாச்சியார் திருக்கோலத்தில் கருட மண்டபத்திற்கு எழுந்தருளிய பிறகு, ஆழ்வார் ஆசார்யர்கள் அனைவருக்கும் வரிசையாக அருளப்பாடு ஸேவிக்கப்படும்.

11) அப்போது கணக்கப்பிள்ளை "சர்வாங்க மோஹனக் கைலி ஒன்று " என்று படிக்கும் கணக்குப்படி ஆழ்வார் ஆசார்யர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு உத்தரீயம் போர்த்தப்பட்டு சந்தனமும், ஸ்ரீசடகோபமும் ஸாதிக்கப்படும்.

12) இன்று பெரியதிருமொழி சாற்றுமுறைக்காக ஆழ்வார் ஆசார்யர் அனைவருக்கும் பஹுமானம் செய்யப் படுகிறது. அரையர்களுக்கு அருளப்பாடு ஸாதித்து தீர்த்தம், கரைசல், மாலை, தொங்கல், பரியட்டம், சாதரா, ஸ்ரீசடகோபம் ஸாதித்த பிறகு சுக்ரவார பண்டாரிக்கு ஸேவையானபிறகு, அரையர் இசையுடன் உள்ளே எழுந்தருளுவார்.

13) ஆர்யபட்டாள் வாசல் தாண்டினதும், கதவுகள் சாற்றப் படும். மேலப்படியில் படியேற்றம், திருவந்திக்காப்பு கண்டருளி, நம்பெருமாள் உள்ளே எழுந்தருளுவார்.

14) இன்று நம்பெருமாள் நாச்சியார் திருக்கோலத்தி லிருப்பதால், அரையர் படியேற்றத்தில் நாச்சியார் விஷயமான கொண்டாட்டத்தைச் சொல்லுவார்.

15) பெரியதிருநாள் என்று அழைக்கப்படும் பகல்பத்து, இராப்பத்து திருநாட்களைப் பற்றிய சில குறிப்புகள்:- திருவரங்கத்தில் நடக்கும் விழாக்களுள் பெரிய திருநாள் பெருவிழாவாகும்.

16) அந்தவிழாவின்போது வைணவர்கள் அனைவரும் அங்குக் குழுமியிருப்பர். "நம்பெருமாள் திருநாள் என்று பேரையிட்டு, ஸ்ரீவைஷ்ணவர்களைத் திரட்டிக் காணுமா போலே " என்று பெரிய வாச்சான்பிள்ளை உவமை காட்டிச் சொல்வது கருதத்தக்கது. (திருப் பாவை-27 -மூவாயிறப்படி) பெரியதிருநாள் விழாவுக்கு எல்லாத் திக்குகளிலிருந்தும் மக்கள் வந்து திரண்டனர். (4-10-2. ஈடு, 10-4-10. ஈடு) பெரிய திருநாளில் போலே உலாவித் திரியலாயிருக்க, (பெ. மடல். கண்ணி. 18) பெரிய திருநாளுக்குப் பின்பு கார்யம் செய்கிறோமென்னுமாப் போலே (திருநெடுந்தாண்டகம்-3) என வரும் உவமைகள் அந்த விழாவின் சிறப்பினை உணர்த்தும். ✱✱✱

## “இராப்பத்து 1-ஆம் திருநாள்”

1) இராப்பத்து என்று அழைக்கப்படும் திருவாய்மொழித் திருநாள் வேதத்திற்கும் திருவாய்மொழிக்கும் ஏற்றமளித்திடும் திருநாளாகும்.

2) மார்கழி மாதம் சுக்ல பக்ஷ ஏகாதசி தொடங்கி பத்து நாளைக்கு நடைபெறும் விழா இது.

3) பரமபதத்திற்குச் செல்லும் அர்ச்சிராதி மார்க்கத்தைப் பற்றி பத்தாம்பத்து 9ஆம் திருவாய் மொழியில் பேசப்படுகிறது.

4) “சூழ்விசும்பணிமுகில்” என்று தொடங்கும் பத்துப் பாசுரங்களில் நம்மாழ்வார் அர்ச்சிராதி மார்க்கத்தில் பரமபதத்திற்குச் செல்லும் ஜீவாத்மா பெறும் பேற்றினை சாந்தோக்ய உபநிஷத்தில் சொல்லப்பட்ட முறையில் அருளிச் செய்துள்ளார்.

5) வைகுண்ட ஏகாதசித் திருநாள் தொடங்கி 10 நாட்களுக்கு நம்பெருமாள் ஒரு ஜீவாத்மா பரமபதத்திற்குச் செல்லும் காட்சியை நாடகம் போல் நடித்துக் காட்டி அருளுகிறார்.

6) வைகுண்ட ஏகாதசியன்று, திருப்பள்ளியெழுச்சி ஆனபிறகு, முறைகார பட்டர்ஸ்வாமி அவருடைய திருமாளிகையில் இருந்து மஹாவைபவத்தோடு அழைத்து வரப்படுவார்.

7) அவர் உள்ளே எழுந்தருளியவுடன் ஆரியபட்டாள் வாசல் கதவுகள் மூடப்படும். நம்பெருமாள் பரமபத வாசலைத் தாண்டிய பிறகே, ஆகமவிதிப்படியும் நீண்டகால பழக்கவழக்கப்படியும் ஆர்யபட்டாள் கதவு வாசல்கள் திறக்கப்படவேண்டும்.

8) முறைகாரபட்டர் சந்தன மண்டபத்தில் உட்கார்ந்ததும், ஸ்தானீகர் கர்ப்பக்ருஹத்திலிருந்து அருளப்பாடு ஸாதிப்பார்.

9) முறைகாரபட்டர் உள்ளே சென்று கிருஷ்ண யஜுர் வேதம் முதல் பஞ்சாதியை ஸேவித்திடுவார்.

10) அதன்பிறகு ரிக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், சந்தஸ் ஸாமம், அதர்வண வேதம், சுக்ல யஜுர்வேதம் ஏகாயன சாகை ஆகியவற்றிற்குத் தனித்தனியாக அருளப்பாடு ஆகும்.

11) அரையர்கள் கர்ப்பக்ருஹத்திற்குள் சென்று திருவாய்மொழி முதல்பத்து முதல் பாசுரமான “உயர்வற உயர்நலம் உடையவன்” என்னும் பாசுரத்தைச் ஸேவித்திடுவர்.

12) இன்றையதினம் பெரியபெருமாள் முத்தங்கியும், நம்பெருமாள் இரத்தின அங்கி, பாண்டியன் கொண்டை ஆகியவற்றையும் அணிந்திருப்பார்.

13) கர்ப்பக்ருஹத்திலிருந்து நம்பெருமாள் புறப்படுமுன் ஆரியபட்டாள் வாசல், நாழிகைக்கேட்டான் வாசல் முதலானவை மூடப்படும்.

14) "அறிவென்னும் தாள் கொளுவி ஐம்புலனும் தம்மில் செறிவென்னும் திண்கதவம் செம்மிமறை யென்னும் நன்கோதி நன்குணர்வார் காண்பரே நாள்தோறும் பைங்கோத வண்ணன் படி" (மூன்றாம் திருவந்தாதி-12) என்ற பாசுரத்தின்படி இந்தக் கதவுகள் மூடப்படுகின்றன.

15) நம்பெருமாள் இரத்தின அங்கியுடன் ஸந்நிதிக்கு வெளியில் வந்து ஸிம்மகதி, ஒய்யார நடை ஆனபிறகு ஸ்தலத்தார், தீர்த்தக்காரர்களுக்கான மரியாதை நடைபெறும்.

16) அதன்பிறகு மேலப்படிக்குக் கீழே நிற்கும் உத்தமநம்பி, ஸ்தானீகரால் அழைக்கப்படுவார்.

17) அவர் நம்பெருமாள் பக்கத்தில் சென்றதும் அவருக்கு பட்டு தொங்குபரியட்டம் கட்டி, நம்பெருமாளுடைய பட்டிலிருந்து கிழிக்கப்பட்ட ஒரு சிறிய துண்டு அவர் தலையில் வைக்கப்படும்.

18) நம்பெருமாள் மேலைப்படியிலிருந்து கீழே எழுந்தருளி நாலடி இட்டபிறகு தங்கத் தடிகளைப் பிடித்துக் கொண்டு வரும் சாத்தாத வைஷ்ணவர்கள் "எழுமினென்று இருமருங்கிசைத்தனர் முனிவர்கள் வழியிது வைகுந்தற்கென்று வந்தெதிரே" (திருவாய்மொழி 10-9-3) என முக்தனைப் பரமபதத்துக்கு அழைத்துச் செல்லும் ஆதிவாஹிகர்களாக நடிக்க நியமிக்கப்பட்டிருப்பதைக் குறிக்க அவர்கள் தலையிலும் பட்டுத்துண்டுகள் வைக்கப்படும்.

19) பிறகு நம்பெருமாள் யாகசாலை மூலைக்குச் சென்று கிழக்கே திரும்பி கொஞ்சநேரம் சென்றதும் 'திருப்பணிசெய்வார்' ஒரு பாத்திரத்தில் தீர்த்தத்தைக் கொண்டு வந்து நம்பெருமாள் முன் சேர்ப்பார். இது பரமபதத்துக்குச் செல்லும் முக்தனை ஆசனத்தி லிருத்தி மேலுகங்களிலுள்ளவர்கள் திருவடி விளக்குகிறார்கள் என்பதைக் குறிப்பிடுகிறது.

20) நம்மாழ்வார் இதைப்பற்றி ''பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்'' (திருவாய்மொழி 9-10-10) என்று உரைத்தார். பிறகு நம்பெருமாள் சேனை முதலியாருக்கு மாலை ஸாதித்துவிட்டு, தெற்கு முகமாய் கீழை ராஜமஹேந்திரன் திருவீதியில் ஒய்யார நடையுடன், நாழிகைகேட்டான் வாசலைச் சென்றடைவார்.

21) மணியகாரர் ஆணையிட்டபிறகு நாழிகைக்கேட்டான் வாசல் கதவுகள் திறக்கப்படும்.

22) ஒய்யார நடையிட்டுக் கொண்டு நம்பெருமாள் துரை மண்டபத்தைச் சென்றடைவார்.

23) அங்கு முறைகாரபட்டருக்கு அருளப்பாடு ஆகி, கிருஷ்ணயஜுர்வேதம் 8ஆம் பிரச்னம் சாற்றுமுறை ஆகும். இராப்பத்தின் அனைத்து நாட்களிலும் பட்டருக்கு மட்டுமே துரைமண்டத்தில் பரியட்டம் கட்டப்படும். மற்றைய வேதங்களை சாற்றுமுறை செய்வோருக்கு பரியட்டம் கட்டப்படுவதில்லை. அனைவருக்கும் தீர்த்தம், சந்தனம், விடாய்ப்பருப்பு ஆகியவை வழங்கப்படும்.

24) அசுரர்களை வடக்கு திசை வழியாகப் பரமபதம் சேர்ப்பித்ததால், இந்த வாசலுக்குப் **பரமபதவாசல்** என்று பெயர்.

25) அசுரர்களுக்கு நம்பெருமாள் இன்று தம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தை ஸேவை ஸாதித்த வண்ணம் ரத்னங்கி யோடு நமக்கு ஸேவை ஸாதிக்கிறார்.

26) ஆயிரங்கால் மண்டபமே பரமபதம்.

27) கொட்டகை பரமபதத்துக்கு வெளியேயுள்ள விண்வெளி.

28) துரைமண்டபம் பரமபதத்துக்கும் ப்ரக்ருதி மண்டலத் துக்கும் நடுவிலுள்ள விரஜா நதி.

29) முமுக்ஷுவான சேதனனை ப்ரக்ருதி மண்டலத்தை விட்டு, அர்ச்சிராதி மார்க்கமாகப் போகும் முறையை இன்றுமுதல் நம்பெருமாள் நாடகமாக நடித்துக் காட்டுகிறார்.

30) அதன்பின், நம்பெருமாள் பரமபதவாசலுக்கு எதிரில் சென்று வடக்கு முகமாய் நின்று அந்த வாசல் கதவுகளைத் திறக்கும்படி நியமித்தவுடன் அவை திறக்கப்படும். இதனால்

ஆக்ஞாசக்ரத்திலுள்ள (ஆறு ஆதாரங்கள்) ருக்ர க்ரந்தி பேதிக்கப்பட்டது குறிப்பிடப்படுகிறது.

31) இந்த வாசலுக்குக் கிழக்குப் பக்கத்தில் விரஜா நதியின் ஸ்தானத்தில் ஒரு கிணறு இருக்கிறது. இங்கிருக்கும் நாலுகால் மண்டபத்தில் வேத விண்ணப்பமாகிப் நம்பெருமாள் இந்த வாசலுக்குப் போனவுடன், அதுவரையில் சாத்திக்கொண்டு வரும் போர்வை களையப்பட்டு, புது மாலைகள் ஸமர்ப்பிக்கப்படும். (வைகுண்ட ஏகாதசி தினத்தன்று மட்டும் இவ்வாறு நடைபெறுவதில்லை. மற்றைய நாட்களில் போர்வை களையப்பட்டு புதுமாலைகள் ஸமர்ப்பிக்கப்படும்.)

32) பரமபதத்திற்குப் பக்கத்திலுள்ள விரஜா நதியை அடைந்து அதில் ஸ்நானம் பண்ணும் முக்தனுக்கு பழைய சரீரம் போய் பஞ்சோபநிஷந்மயமான வேறு (அப்ராக்ருத சரீரம்-பஞ்ச பூதங்களின் கலப்பற்ற சுத்த ஸத்வமான சரீரம்) சதுர்புஜ, சங்கு சக்ராதிகளும் ஏற்படுகின்றன என்னும் தத்வம் இங்கு காட்டப்படுகிறது.

33) ஏகாதசி தினத்தன்று ரத்ன அங்கியோடு நம்பெருமாள் பரமபதவாசலுக்குள் நுழைந்து செல்வதால் விரஜா நதியில் தீர்த்தமாடின முக்தன் பரிசுத்தமான சுத்த ஸத்வமய சரீரத்தைப் பெற்று, அதனால் ஏற்படும் முக ஒளியோடு "ஒளிக்கொண்ட சோதியாய் உடன் கூடுவது" காட்டப்படுகிறது.

34) நம்பெருமாள் திருமாமணி மண்டபம் சென்றவுடன் இவ்வாறு அர்ச்சிராதிகதியில் செல்லும் ஜீவன் எவ்வாறு பரமபதத்தை அடைகிறான் என்னும் நிகழ்ச்சி முடிவுறுகிறது. நம்பெருமாளும் தன் நடிப்பைப் பூர்த்தி செய்து கொண்டு அந்தமில் பேரின்பமாகிய பரமபதத்தில் ஆழ்வார் ஆசார்யர்கள் புடைசூழ வீற்றிருந்து திருவாய் மொழி முதல்பத்து 110 பாசுரங்களை அன்றைய இரவு கேட்டு மகிழுகிறார். ✱✱✱

## "இராப்பத்து 2-ஆம் திருநாள்"

1) இரண்டாம் திருநாள் தொடங்கி 10ஆம் திருநாள் ஈறாக (8ஆம் திருநாளைத் தவிர்த்து) அனைத்து நாட்களிலும் நம்பெருமாள் பரமபத வாசல் வழியாகக் கொட்டகையில் பத்தியுலாத்தி திருமாமணி மண்டபத்தைச் சென்றடைவார்.

2) தினந்தோறும் ஆழ்வார்கள் மற்றும் ஆசார்யர்கள்

கொட்டகையில் நம்பெருமாள் வருகைக்காகக் காத்திருப்பார்கள்.

3) நம்மாழ்வார், உடையவர், திருமங்கைமன்னன் இவர்களோடு நடை கொட்டகையில் அத்யாபகர்கள் பட்டர் திருவம்சத் தினர் ஸ்ரீரங்கராஜஸ்தவ பாராயணத்தோடு நம்பெருமாளை எதிர் பார்த்துக் கொண்டிருப்பார்கள். நம்பெருமாள் நடை கொட்டகை யிலிருக்கும் மண்டபத்திலேறி, தமக்காகக் காத்திருக்கும் ஆழ்வார் களையும் உடையவரையும் நிமிர்ந்து பார்த்து, பெரு மகிழ்ச்சியோடு அவர்களிடம் ஒய்யார நடையில் போய் அவர்களோடு கொஞ்ச நேரம் கலந்திருப்பார். ஸ்ரீரங்கராஜஸ்தவம் கடைசி ச்லோகம் சாற்று முறை யானதும், நம்பெருமாள் கொட்டகைக்குப் போய் வட கிழக்கிலுள்ள மண்டபத்தில் எழுந்தருளியிருப்பார்.

**ஸ்ரீரங்கராஜஸ்தவத்தின் பெருமை:-**

4) இந்த ஸ்தவம்-பூர்வ சதகமென்றும் உத்தரசதகமென்றும் இரண்டு பகுதிகளையுடையது. பூர்வசதகம் நூற்றிருபத்தேழு ச்லோகங்கள் கொண்டது. உத்தரசதகம் நூற்றைந்து ச்லோகங்கள் கொண்டது.

5) இந்த ஸ்தவத்தின் பூர்வ சதகத்தாலே த்வயத்தின் பூர்வ வாக்கியப் பொருளையும் உத்தரசதகத்தாலே அந்த த்வயத்தின் உத்தர வாக்கியப் பொருளையும் விவரிப்பதாகப் பெரியோர்கள் நிர்வஹிப்பர்கள்.

6) இவற்றுள் பூர்வசதகத்தில் ஆசார்ய பரம்பராஸ்துதி முன்னாக இழிந்து மங்களாசாஸனம் செய்து, அவையடக்கம் கூறி, திருக்காவேரி யாற்றில் நீராடினமையைப் பேசி, அங்குள்ள சோலைகளின் வனப்பை வருணித்து, திருவரங்க மாநகரின் சிறப்பைப்பாடி, நகர பரிபாலகர்களை வணங்கி, அவர்களிடத்து அநுமதிபெற்று உள்ளே புகுந்து, அங்குள்ள ஸகல சராசரங்களையும் நித்ய முக்தர்களின் திருவுருமாகப் பாவித்து வணங்கி, கோபுரங்கள் மற்றும் திருமதிள்களோடு கூடிய பெரிய கோயிலின் நிலைமையை வருணித்து, திருமங்கையாழ்வார் ஏறியருளப் பண்ணின திருமண்டபங் களையும் திருமதிள்களையுந் தொழுது, ஸந்நிதி த்வார பாலகர்களை ஸேவித்து, நூற்றுக்கால் மண்டபத்தை மங்களாசாஸனம் செய்து, சந்த்ர புஷ்கரிணியிற் குடைந்தாடினமை கூறி, ஆழ்வார்கள் பதின்மரையும் இறைஞ்சி, ப்ரணவாகார விமானத்தைக் கைதொழுது, ஸேனை முதலி யாரையும் பெரிய திருவடியையும் பரிவாரங்களுடன் ஸேவித்து,

பஞ்சாயுதாழ் வார்கள், திருவடி, விபீஷணாழ்வான் என்னுமிவர் களையும் வாழ்த்தி, திருப்பிரம்பையும், திருமணத் தூணையும் வழிபட்டு கர்ப்பக்ருஹத்தை அனுபவித்து திருவடி வருடும் பிராட்டிமார்களையும், சாமரம் பணிமாறும் மங்கை மார்களையும் துதித்து ஆக இவ்வளவு அனுபவங்களையும் 62 ச்லோகங்களாலே வரிசைக்ரமாக வகுத்துரைத்து, இவ்வளவாலே த்வயத்தில் உள்ள நாராயணபதத்தின் அவயவமான நாரபதத்தின் பொருளை விரித்துரைத்தநுபவித்து, இப்படிப்பட்ட நாரங்களுக்கு அயனமாய் உள்ள ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளை சரணம் புகுகின்றே றென்பதாக மேலுள்ள பதங்களை விவரிக்கும் முகமாக அறுபத்து மூன்றாம் ச்லோகந் தொடங்கி அழகியமணவாளனை அனுபவிப் பராய்ப் பூர்வசதகத்தைத் தலைக்கட்டிப் பூர்வவாக்யார்த்த விவரணமும் செய்தருளினாராகிறார். உத்தரசதகத்தில் வேதாந்த விழுப்பொருள் பெரியபெருமாளே என்று அறுதியிடுகிறார் பட்டர்.

7) கொட்டகையில் அரையர்கள் திருவாய்மொழி 2ஆம்பத்து முதல் திருவாய்மொழி முதல் பாசுரமான "வாயும் திரையுகளும் கானல் மடநாராய்" என்ற பாசுரத்தை விண்ணப்பம் செய்து "மலைப்பு" என்னும் அபிநயத்தைச் செய்திடுவர்.

8) அரையர்கள் கொண்டாட்டம் ஸேவிக்க படியேற்ற ஸேவையாகி, திருமாமணி மண்டபத்தில் எழுந்தருளி யிருப்பார் நம்பெருமாள்.

9) இரவு 2ஆம் பத்து 112 பாசுரங்கள் ஸேவிக்கப்படும்.

10) அதன்பின் புறப்பாடாகி வீணை ஏகாந்தத்துடன் கர்ப்ப க்ருஹத்திற்கு எழுந்தருளுவார் நம்பெருமாள். ✸✸✸

## "இராப்பத்து 3-ஆம் திருநாள்"

1) இராப்பத்து மூன்றாம் திருநாளன்று திருமாமணி மண்டபத்தில் திருவாய்மொழி 3ஆம் பத்து "முடிச்சோதியாய்" (3-1-1) தொடங்கி, "சன்மம் பலபல செய்து" (3-10) பதிகம் ஈறாக 110 பாசுரங்களை அரையர்கள் ஸேவித்திடுவர்.

2) முதல்நாள் முதல்பத்தில் "உயர்வற உயர்நலம் உடையவன்" , 2ஆம் நாள் 2-10 திருவாய்மொழிப் பதிகத்தில் "கிளரொளி இளமை கெடுவதன் முன்னம் பாசுரம், 3ஆம் திருநாளன்று திருவாய்மொழி 3-3-1 "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி"

ஆகிய பாசுரங்களுக்கு அரையர் அபிநயம் மற்றும் அவற்றுக்கு அமைந்த ஈடு வ்யாக்யான உரைகள் ஸேவிக்கப்படும்.

3) 2ஆம் திருநாள் தொடங்கி 10ஆம் திருநாள் வரை (8ஆம் திருநாள் தவிர்ந்து) அனைத்து விழா நாட்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகள் ஒரே தன்மை கொண்டவை. இவற்றில் ஒவ்வொரு நாளுக்கும் மாறுதல் வேதத்தில் சில ப்ரச்னங்களும், திருவாய் மொழிப்பாசுரங்களுமே ஆகும்.

4) "காளங்கள் வலம்புரி கலந்து எங்கும் இசைத்தனர் " (திருவாய்மொழி 10-9-6) என்றபடி பரமபத வாசல் திறந்தபின் எக்காளை முதலானவை ஊதப்படுகின்றன.

5) நம்பெருமாள் எழுந்தருளும்போது மத்தியில் உபயங்கள் கண்டருள்வது, "எதிரெதிர் இமையவர் இருப்பிடம் வகுத்தனர் " (திருவாய்மொழி 10-9-4) என்பதின் பொருளைக் காட்டிக் கொடுக்கிறது.

6) நடை கொட்டகையில் நம்மாழ்வார், திருமங்கைமன்னன், உடையவர் ஸ்ரீரங்கராஜஸ்தவம் சொல்லும் கோஷ்டியோடு நம்பெரு மாளை எதிர்கொண்டழைத்தல் "குடியடியார் இவர் கோவிந்தன் தனக்கென்று முடியுடை வானவர் முறை முறை எதிர்கொள்ள" (திருவாய்மொழி 10-9-8) என்றபடி பரமபதத்தி லுள்ளவர்கள் முக்தனை எதிர் கொண்டழைத்து ஸத்காரம் செய்வதைக் குறிப் பிடுகிறது.

7) "கொடியணி நெடுமதிள் கோபுரம் குறுகினர் வடிவுடை மாதவன் வைகுந்தம் புகவே" (திருவாய்மொழி 10-9-8) என்பதின் பொருள் நம்பெருமாள் தவிட்டரை வாசலுக்குள் நுழைவதால் நிரூபிக்கப்படுகிறது.

8) கொட்டகை பரமபதத்திலுள்ள திவ்ய ஆனந்தமயமான மண்டபத்தின் ஸ்தானத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆயிரம் கால் மண்டபத்தில் 979 தூண்களே இருப்பதால் ஒவ்வொரு ஆண்டும் 21 தென்னைமரங்கள் தூண்களாக நிறுத்தப்படுகின்றன.

9) அதில் நம்பெருமாள் ஆழ்வார்களுக்கு மரியாதை பண்ணிவிட்டு பத்தியுலாவி, ஆயிரங்கால் மண்டபத்திற்கு வந்து படியேற்ற மாலை சாற்றிக் கொண்டு அதில் ஏறிச் செல்லும்போது

தாஸ நம்பிகள் எதிரில் வருவதால் “கதிரவரவரவர் கைந்நிரை காட்டினர் ” திருவாய்மொழி 10-9-4 என்கிறபடி பரமபதவாசிகள் அவ்விடம் வந்த முக்தனை ஸத்கரித்து அங்குள்ள வைபவங் களைக் காட்டுகிறார்களென்று அறிவிக்கப்படுகிறது.

10) நம்பெருமாள் திருமாமணி மண்டபத்திற்குப் பக்கத்தில் சென்று கடதீபாராதனையாகும்போது தாஸிகள் தட்டி களுடன் நிற்பதால் (இப்போது இந்த கைங்கர்யம் நடைமுறையில் இல்லை.) “நிறைகுடவிளக்கமும் மதிமுக மடந்தையர் ஏந்தினர் வந்தே” (திருவாய்மொழி 10-9-10) என்பது காட்டப்படுகிறது.

11) பிறகு நம்பெருமாள் மண்டபத்தில் எழுந்தருளி யிருக்கும்போது அவர் எதிரில் ஆழ்வார்கள் வீற்றிருப்பது “மாமணி மண்டபத்து அந்தமில் பேரின்பத்து அடியரோடு இருந்தமை” (திருவாய்மொழி 10-9-11) என்கிறபடி முக்தன் பரமபதத்திலுள்ள திருமாமணிமண்டபத்தை அடைந்து அங்குள்ள நித்ய முக்தர் மத்தியில் ஆனந்தத்துடன் இருப்பதைக் காட்டுகிறது.

12) அரையர் ஸேவையான பிறகு வெள்ளிச் சம்பா அமுது கண்டருளுவார்.

13) கொட்டகையிலிருந்து நம்பெருமாள் சந்நிதிக்குள் செல்லப் புறப்படுவார்.

14) பனிக்காக போர்வை சாத்திக் கொண்டு விளாமிச்சிவேர் சப்ரத்தில் எழுந்தருளுவார்.

15) கொட்டகையில் **மல்லாரி** என்னும் வாத்திய கோஷத் துடன் ஒய்யார நடைபோடுவார். அப்பொழுது பலவித வாத்யங்கள் வாசிக்கப்படும்.

16) அந்த வாத்யங்களில் கடைசியாக வாசிக்கப்படுவது வீணை. இந்த வாத்யத்துடன் நாழிகைக்கேட்டான் வாசலிலிருந்து ஏகாந்த வீணை இசையுடன் எழுந்தருளி, படியேற்றம் ஆனபிறகு ஸர்ப்ப கதியில் கருவறைக்குள் செல்வார்.

***

### “இராப்பத்து 4-ஆம் திருநாள்”

1) இன்று அரையர் ஸேவையில் திருவாய்மொழி 4ஆம் பத்து

முதல்திருவாய்மொழி ''ஒருநாயகமாய்'' பதிகம் தொடங்கி ,4ஆம் பத்து 10ஆம் திருவாய் மொழி ''ஒன்றும் தேவும்'' பதிகம் ஈறாக தாளத்தோடு ஸேவிக்கப்படும். இன்றைய தினம் ''ஒன்றும்தேவும்'' பாசுரத்திற்கு அபிநயமும் ஈட்டு உரையும் ஸேவிக்கப்படும்.

2) திருவரங்கத்தில் இராப்பத்துத் திருநாளின்போது திருவாய்மொழியில் கோயில்திருவாய்மொழி பதிகங்களில் இருந்து மட்டுமே பாசுரங்கள் அபிநயிக்கப்படுகின்றன. அவற்றிற்கு மட்டுமே ஈட்டு உரை ஸேவிக்கப்படுகின்றன.

3) முகம்மதியர்கள் படையெடுப்பின்போது(கி.பி.1323) மூலவருக்குக் கல்திரை ஸமர்ப்பிக்கப்பட்டது.

4)அழகியமணவாளன் திருவரங்கத்தைவிட்டு நீங்கி 48ஆண்டுகளுக்குப்பிறகுதான் திருவரங்கத்திற்கு மீண்டும் எழுந்தருளினார். (கி.பி. 1371ஆம்ஆண்டு)

5) திருவத்யயன உத்ஸவ காலங்களில் அப்பொழுது, இருந்த அரையர்கள் ''ஆழ்வார்களாகிற தாளங்களை'' எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போய் விண்ணப்பம் செய்தால் அதன் ஓசையினால் ஏற்படக்கூடிய எதிரிகளின் இன்னலுக்கு அஞ்சி, கல்திரை முன்பு கைத் தாளம் ஸேவித்து, அருளிச்செயலில் முக்கியமாக அரையர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமொழிகளையும், திருவாய்மொழிகளையும் தேவகானத்தில் இசையுடன் ஸேவித்து வந்தனர்.

6)அரையர்களால் ஸேவிக்கப்பட்ட பாசுரங்களே (பெரியகோயிலில் பெரியபெருமாள் திருமுன்பே கைத்தாளத்தில் ஸேவித்த பாசுரங்கள்) கோயில் திருமொழி, கோயில் திருவாய்மொழி என்று அழைக்கப்படுகிறது.

7) திருவாய்மொழியில் முதல்பத்தில் ''உயர்வற''(1-1), ''கிள ரொளி இளமை'' (2-10), ''ஒழிவில்காலமெல்லாம்'' (3-3), ''ஒன்றும் தேவும்'' (4-10), ''ஆராஅமுதே'' (5-8), ''உலகமுண்ட பெருவாயா'' (6-10), ''கங்குலும் பகலும்'' (7-2) ''நெடுமாற்கடிமை''(8-10), ''மாலைநண்ணித் தொழுதெழுமினோ'' (9-10), ''தாளதாமரை'' (10-1), (திருவரங்கத்தில் ''தாள தாமரை'' பதிகத்தை கோயில் திருவாய்மொழி கணக்கில் கொண்டுள்ளனர்.)

8) கீழை உள்திருவீதி என்று அழைக்கப்பட்டு வந்தது கீழ

உத்தர வீதி என மருவி உள்ளது. இந்தத் திருவீதிக்கு செந்தமிழ் பாடுவார் வீதி என்று இராமாநுசர் பெயரிட்டு அழைத்து வந்தார்.

9) செந்தமிழ் பாடுவார் என்றால் அரையர்களைக் குறிக்கும். 700 அரையர்கள் இராமாநுசர் காலத்தில் இருந்து வந்ததாக ''ராமா நுஜார்ய திவ்யசரிதை'' என்னும் நூலில் பிள்ளைலோகம் ஜீயரால் குறிப் பிடப்பட்டுள்ளது.

10) அரையர்கள் எண்ணிக்கையில் குறைந்து வந்த கால கட்டத்தில் அவர்கள் உபயோகித்து வந்த தாளங்கள் உருக்கப்பட்டு மணியாக வார்க்கப்பட்டுள்ளது.

11) இந்தத் திருமணியின் ஓசையைக் கேட்டுக் கொண்டே பெரியபெருமாள் இன்றும் அரவணைத்தளிகை கண்டருளுகிறார்.

12) ஆயிரங்கால் மண்டபத்திலிருந்து நம்பெருமாள் புறப்பாடு கண்டருளுகையில் பனிகாலமாகையால் பெருமாள் ராத்திரி டோரா போர்த்திக்கொண்டு புறப்பட்டு, கொட்டகையில் மல்லாரி என்னும் மல்லகதியில் போய், பனி படாதிருக்க விளாமிச்சிவேர் தடுக்குக் கட்டின சப்பரத்தில் எழுந்தருளுவார்.

13) இங்கேயிருந்து அரையர் செய்யும் இசை கானத்தோடு போய் ''**திறோ**'' என்று ஸ்தானீகர் ஸாதிக்க ஆரியபட்டாள் வாசலைத் திறப்பித்து, உள்ளே எழுந்தருளுவார்.

14) அதன்பிறகு அந்த வாசல் சாற்றப்படும். நாழிகைக் கேட்டான் வாசலும் அப்படியே ''**திறோ**'' என்று திறக்கப்பட்டு, அங்கே படியேற்றம் கண்டருளி நம்பெருமாள் உள்ளே எழுந்தருளுவார். உடனே இந்த வாசலும் சாற்றப்படும்.

15) நம்பெருமாள் வீணை ஏகாந்தத்திற்குப் பிறகு கர்ப்பக்ருஹத்தினுள் எழுந்தருளுவார்.

✸✸✸

## ''இராப்பத்து 5-ஆம் திருநாள்''

1) இன்று 5ஆம் பத்து முதல் திருவாய்மொழி ''கையார் சக்கரத்து'' பாசுரம் தொடங்கி ''பிறந்தவாறும் வளர்ந்த வாறும்'' 5-10 பதிகம் ஈறாக 110 பாசுரங்கள் ஸேவிக்கப்படும்.

2) 5ஆம் பத்து 8ஆம் திருவாய்மொழியில் ''ஆராஅமுதே'' என்று தொடங்கும் முதல் பாசுரத்திற்கு அரையர் அபிநயமும் வ்யாக்

யானமும் ஸேவிக்கப்படும்.

**3) வைகுண்ட ஏகாதசி விழா பற்றிய சில சிறப்புச்செய்திகள்:-**

ஸ்ரீமந்நாராயணன் ப்ரளயம் முடிந்தபிறகு (ப்ரச்ந ஸம்ஹிதை யில் பகவான் பிராட்டிக்குத் தெரிவித்தபடி) ஆலிலைமேல் பள்ளி கொண்டு தம்முடைய நாபீகமலத்தில் இருந்து பிரம்மாவை ஸ்ருஷ்டித்தார்.

4) தான் ஸ்ருஷ்டி தொழிலைச் செய்வதால் பிரம்மா அஹங்காரம் கொண்டார்.

5) உடனே ஸ்ரீமந்நாராயணனுடைய காதிலிருந்து இரண்டு அசுரர்கள் உண்டாகி, பிரம்மாவைக் கொல்ல முயன்றார்கள். "நீங்கள் வேண்டும் வரத்தை நான் கொடுக்கிறேன், பிரம்மாவைக் கொல்லவேண்டாம்" என்றார் ஸ்ரீமந்நாராயணன்.

6) அதற்கு "நீ என்ன எங்களுக்கு வரமளிப்பது? உனக்கே நாங்கள் வரமளிப்போம்" என்றனர் அந்த அசுரர்கள்.

7) ஸ்ரீமந்நாராயணன் "அஹங்காரம் கொண்ட நீங்கள் என்னால் வதைக்கப்படுவீர்கள்" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

8) "அசுரர்கள் இப்படி எங்களைத் தண்டிக்கக்கூடாது. உம்மோடு ஒரு மாதகாலம் சண்டை செய்து, உம்முடைய அனுக் ரஹத்தினால் நாங்கள் நற்கதி பெற வேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

9) அப்படியே அசுரர்கள் ஒரு மாதம் ஸ்ரீமந்நாராயணனோடு சண்டைசெய்த பிறகு வதைக்கப்பட்டனர்.

10) ஸ்ரீமந்நாராயணனுடைய வீர்ய சக்த்யாதி குணங்களை அறிந்த அசுரர்கள் அவரோடு பரமபதத்தில் நித்யவாஸம் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டார்கள்.

11) ஸ்ரீமந்நாராயணன் மார்கழி சுக்ல ஏகாதசியன்று உத்தர த்வாரத்தைத் (வடக்கு நுழைவாயில்) திறந்து அவ்வழியாய் ஸத்யலோகத்துக்கும் மேலுள்ள பரமபதத்தில் அசுரர்களைக் கொண்டு சேர்த்தார்.

12) அங்கே ஆதிசேஷன்மேல் வீற்றிருந்து நித்ய ஸூரிகளால் சூழப்பட்டிருக்கும் ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்யமங்கள விக்ர ஹத்தைத் தரிசித்துப் பரமானந்தமெய்தினர் அசுரர்கள்.

13) அசுரர்கள் ''பிரம்மா முதலானோர் யாவரும், ஸ்ரீமந் நாராயணனை அர்ச்சை வடிவில் ப்ரதிஷ்டிப்பித்து, மார்கழி சுக்ல ஏகாதசி அன்று எங்களுக்குப் பண்ணின அனுக்ரஹத்தை உத்ஸவமாக அனுஷ்டிக்க வேண்டும் என்று ஸ்ரீமந்நாராயணனிடம் பிரார்த்தித்துக் கொண்டார்கள்.

14) அன்றையதினம் வடக்கு நுழைவாயில் வழியே எழுந்தருளும் ஸ்ரீமந்நாராயணனை தரிசிப்பவர்களும், அவரோடுகூட பரமபத வாசலைக் கடந்து செல்வோரும் எத்துணை பாவம் செய்தி ருந்தாலும் மோக்ஷத்தைப் பெறவேண்டும் என்று ஸ்ரீமந்நாராயண னிடம் அவர்கள் மேலும் பிரார்த்தித்தார்கள்.

15)ஸ்ரீமந்நாராயணனும் அப்படியே அனுக்ரஹித்தார். ✸✸✸

## ''இராப்பத்து 6-ஆம் திருநாள்''

1) இன்று 6ஆம் பத்து முதல் திருவாய்மொழி முதல் பாசுரம் ''வைகல் பூங்கழிவாய்'' தொடங்கி 6ஆம்பத்து 10ஆம் திருவாய்மொழி ''உலகமுண்ட பெருவாயா'' பதிகம் ஈறாக ஸேவிக்கப்படும்.

2) 6ஆம் பத்து 10ஆம் திருவாய்மொழி ''உலகமுண்ட பெருவாயா'' முதல் பாசுரத்திற்கு அபிநயம் மற்றும் வ்யாக்யானம்.

3) இன்று அஹோபில மடத்திலிருந்து ''சிறப்பு'' யானைமேல் எழுந்தருளப்பண்ணப்பட்டு கொண்டு வரப்படும். ஆதிவண்சடகோப ஜீயர் எழுந்தருளியிருந்தபோது இராப்பத்து 5ஆம் உத்ஸவத்தில் 5ஆம் பத்து 2ஆம் திருவாய்மொழியில் ''பொலிக பொலிக'' என்று கலியின் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க இராமானுசர் அவதரிக்கப் போகிறார் என்று அருளிச் செய்துள்ளதைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து மறுநாள் நம்பெருமாளுக்குத் தம்முடைய மடத்திலிருந்து சீர் விடுத்தார்.

4) ஒவ்வொரு ஆண்டும் இந்த **சீர்** நடக்க வேண்டியதற்கான

பொருளையும் தேவஸ்தான அதிகாரிகளிடமே ஒப்படைத்தார்.

5) ஆகையால் திருக்கொட்டாரத்தில் இருந்து அரிசி, பருப்பு, பூசணிக்காய் முதலிய சாமான்கள் அஹோபில மடத்துக்கு அனுப்பப்படும்.

6) நம்பெருமாள் திருமாமணி மண்டபம் எழுந்தருளித் திரைபோட்டபிறகு அஹோபில மடத்தார் முறைகார வாதூல தேசிகரையும், அத்யாபகர்களையும், மணியகாரரையும், ஸ்தானீ கரையும் மடத்துக்கு எழுந்தருளப் பண்ணுவார்கள்.

7) அங்கு மடத்தாரால் ஸித்தமாய் வைக்கப்பட்டிருக்கும் சந்தன தாம்பூலங்கள் இப்போது அழைக்கப்பட்டவர்களுக்கு ஸ்தானீ கரால் விநியோகம் செய்யப்படும்.

8) இப்படி கோஷ்டியான பிறகு தேவஸ்தானத்தார் அனுப்பி வைத்துள்ள துப்பட்டாவை மடத்து ஸ்ரீகார்யம் ஸ்வாமி, கோயில் யானைமேல் வெள்ளித்தட்டில் வைத்து, நம்பெருமாளுக்கு எதிரில் கொண்டு வருவார்.

9) கொட்டாரத்தில் இருந்து கொண்டு வந்த அரிசி பருப்பு சாமான்கள் மீண்டும் கொட்டாரத்துக்கே போய்விடும்.

10) நம்பெருமாள் ஸ்ரீகார்யம் ஸ்வாமிக்கு ஸேவை மரியாதை அனுக்ரஹிப்பார்.

11) ஸ்ரீரங்கம் தென்னார்சார்ய ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த தாகையால் எல்லா கோஷ்டி க்ரமங்களும் தென்கலையார்களாலே மட்டும் நடத்தப்படும்.

12) **வீணை ஏகாந்தம் பற்றிய சில குறிப்புகள்:-**

நம்பெருமாள் நாழிகேட்டான் வாசலுக்குள் போய் மேற்கு முகமாகத் திரும்பியதும், வீணை மிராஸ் பாத்யதை கொண்டவர்களால் வீணை வாசிக்கப்படும்.

13) பண்டைய காலங்களில் தாஸிகள் செய்யும் அபிநயத்

தோடும், நட்டுவன் ஆலாபனம் செய்யும் ஸ்வர ஆலாபனைகளோடும், தாள ம்ருதங்கங்களோடும், வீணை மிராசுக்காரருடைய வீணை கானத்தோடும் நம்பெருமாள் ராஜமஹேந்திரன் திருச்சுற்றின் மேற்குப் பகுதி வழியாக மேலைப் படியை சென்றடைவார்.

14) சாத்தாத வைஷ்ணவர்கள் ''**எச்சரீகை எச்சரீகை**'' என்று கோஷித்துக்கொண்டு வாரி இறைக்கும் பச்சைக் கற்பூரப்பொடி கலந்த பூவிதழ்களோடும் நம்பெருமாள் மேலைப்படிபோய், வீணைகானத்தோடு கூடவே படியேற்றம் கண்டு, நேராக உள்ளே எழுந்தருளுவார்.

✸✸✸

## ''இராப்பத்து 7-ஆம் திருநாள்''

1) இன்று திருக்கைத்தல ஸேவை எனப்படும் நிகழ்ச்சி நடைபெறும்.

2) அரையர் ஸேவையில் 7ஆம் பத்து முதல் திருவாய்மொழி ''உண்ணிலாவிய ஐவரால்'' பதிகம் ஸேவிக்கப்பட்டு அரையர் ஸேவை நிறுத்தப்படும்.

3) திருவாய்மொழியில் திருவரங்கத்திற்கான மங்களா சாஸனமாக அமைந்துள்ளது 7ஆம் பத்து 2ஆம் திருவாய் மொழிப் பதிகம் ''கங்குலும் பகலும்''.

4) நம்மாழ்வாராகிய பராங்குசன் தன்னிலை மாறி பெண் நிலை அடையும்போது அவருக்குப் பராங்குசநாயகி என்ற பெயர் சூட்டப்படுகிறது.

5) பராங்குச நாயகியாகிய தலைமகள் திருவரங்கனைக் கண்டு மனம் உருகி, கண்ணீர் வெள்ளத்தில் மிதக்கும் நிலையே ''கங்குலும் பகலும்'' பதிகத்தில் பேசப்படுகிறது.

6) தலைமகளாகிய பராங்குச நாயகியின் இந்த நிலையை அவளுடைய தாயார் திருவரங்கனிடம் எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது இந்தப் பதிகம்.

7) அதனால்தான் இன்றைய தினம் நம்மாழ்வார் பராங்குச நாயகியாய் காட்சியளிப்பார்.

8) இன்று நம்பெருமாள் போர்த்திக் கொண்டு புறப்படுவதும், பரமபத வாசலில் திரைபோட்டு மாலைசாற்றிக் கொள்வதும் கிடையாது. (அதற்குக் காரணம் இன்று நம்பெருமாள் நம்பெருமாளாகவே புறப்பாடு

கண்டருளுகிறார். இன்று அவர் ஜீவாத்மா பரமபதத்துக்குச் செல்லும் நிகழ்ச்சியை நடித்துக் காண்பிப்பதில்லை)

9) நம்பெருமாள் இன்று அதிக திருவாபரணங்கள் சாற்றிக் கொள்ளாமல், 5 அல்லது 6 பீதாம்பரங்களை அடுக்காக சாற்றிக் கொண்டு புறப்பாடு கண்டருளுவார்.

10) இன்று ஸ்ரீரங்கராஜஸ்தவத்துக்குப் பதிலாக கூரத்தாழ்வான் அருளிச் செய்த ஸ்ரீஸ்தவமும், ஸ்ரீரங்கநாச்சியார் விஷயமாய் ஸ்ரீபராசர பட்டர் அருளிச் செய்த ஸ்ரீகுணரத்னகோசமும் ஸேவிக்கப்படும்.

11) நம்பெருமாள் அர்ச்சகர்களின் கரங்களில் எழுந்தருளியிருந்து திருமாமணி மண்டபத்தின் மேல் குறட்டுக்கு வந்து நம்மாழ்வாருக்கு ஸேவை ஸாதிப்பார்.

12) 7ஆம் திருநாள் நம்பெருமாள் திருமண்டபம் எழுந்தருளத் திருத்திரை ஸமர்ப்பித்த பிறகு தோளுக்கினி யானிலிருந்து கீழே இறங்கியதும் திருமாமணி மண்டபத்தில் சிம்மாசனத்தில் அர்ச்சகர்கள் ஸ்ரீசடகோபனையும் செங்கோலினையும் எழுந்தருளப் பண்ணுவார்கள்.

13) கொட்டகையில் ‘‘உண்ணிலாவிய’’ திருவாய்மொழி (7-1) தொடக்கம் செய்த அரையர்கள் திருமாமணி மண்டபத்தில் ‘‘உண்ணி லாவிய’’ பதிகத்தின் மற்றைய பாசுரங்களை ஸேவித்து சாற்றுமுறை செய்வர்கள்.

14) திருக்கைத்தல ஸேவையின் போது ‘‘கங்குலும் பகலும்’’ (திருவாய்மொழி 7-2) ஸேவிப்பர்.

15) நம்பெருமாள் ஆழ்வாருக்குத் திரை வாங்கி, திருக்கைத்தலத்தில் ஸேவை ஸாதிக்கும்போது, அந்தத் திருவாய்மொழி பாக்கி பாட்டுக்களைப் பூர்த்தி செய்த பிறகு, திரை சேர்த்து நம்பெருமாள் திருமாமணி மண்டபத்தில் எழுந்தருளுவார்.

16) திருக்கைத்தல ஸேவைக்காக உத்தமநம்பி ஸமர்ப்பிக்கும் சர்க்கரைப் பொங்கலைப் நம்பெருமாள் முதலில் அமுதுசெய்தபிறகு, திரை வாங்கப்படும்.

17) அலங்காரம் அமுது செய்தபிறகு, ஹிரண்ய வதத்துக்கு அருளப்பாடாகும்.

18) ஹிரண்ய வதத்துக்காக அரையர் தீர்த்தம் சடகோபம் ஸாதிப்பர். முதல்நாள் ‘‘உயர்வற உயர்நலம்’’ வ்யாக்யானம் ஆன உடனும், 7ஆம் திருநாள் ‘‘கங்குலும் பகலும்’’ வ்யாக்யானம் ஆன உடனும் நம்மாழ்வார் ஸந்நிதிக்காரர் அரையர்களுக்கு சாத்துபடி

வேளையம் ஸம்பாவனை ஸமர்ப்பித்திடுவார். ✱✱✱

## "இராப்பத்து 8-ஆம் திருநாள்"

1) இன்று வேடர் பறி எனப்படும் "வேடுபறி", கீழை ஆலிநாடன் வீதியாகிய மணல்வெளியில் நடைபெறும்.

2) சந்தன மண்டபத்திலேயே நம்பெருமாள் குதிரை வாஹனத்தில் கிழக்கு முகமாக எழுந்தருளியிருப்பார்.

3) முறைகாரபட்டர் எழுந்தருளி "திருவரங்க வேத பாராயணத் தளிகை" அமுது செய்வித்த பிறகு, திரை வாங்கப்படும்.

4) இன்று நம்பெருமாள் வாஹனத்திலிருப்பதால் பரமபத வாசல் வழியாக எழுந்தருள மாட்டார்.

5) அங்கே நடக்கும் வேத விண்ணப்பம் இங்கேயே நடக்கும்.

6) நம்பெருமாள் புறப்பாடு கண்டருளி கீழை ஆலிநாடன் வீதியைச் சென்றடைவார்.

7) அங்கே வையாளி ஆகி, குதிரைக்குக் கடலைச் சுண்டலும், நம்பெருமாளுக்குப் பானகம் விடாய்ப்பருப்பும் அமுது செய்விக்கப்படும்.

8) காவல் மிராசுக்காரர்கள் திருமங்கையாழ்வாரோடு வந்து நம்பெருமாளைச் சுற்றி நோட்டமிட்டுச் செல்வார்கள்.

9) திருமங்கையாழ்வார் வலது கண்ணோரத்தின் கீழ் வைத்த பிடியும் தாழ்ந்த தோளும், மடித்த இடக்காலும், மண்டிபோட்ட வலக்காலும், சக்கரமாய் வளைத்த வில்லுடன் வந்து நம்பெருமாளும் கைங்கர்ய பரர்களும் விழித்திருக்கிறார்களா? தூங்குகிறார்களா என்று துப்பறிந்து போவார்;

10) பரமபத வாசலில் கத்தி, கேடயம், உடைவாள், முதலியன தரித்து, தம்முடைய பரிஜனங்களோடு வந்து, நம்பெருமாளுடைய சொத்துக்களையெல்லாம் கொள்ளையிட்டுக் கொண்டு ஓடுவார்.

11) நம்பெருமாளும் ஓடிப்போய் அவரைப் பிடிக்க

முடியாமல் திரும்பி வந்து, பறிமுதல் கணக்கு வாசித்த பிறகு காவல்காரர்களை அனுப்புவார்.

12) கோயில் கணக்கப்பிள்ளை திருமங்கையாழ்வார் தம்முடைய அந்தரங்க சீடர்களோடு வந்து கொள்ளை அடித்துச் சென்றபின், இன்னென்ன பொருட்கள் அவரால் கொள்ளையடிக்கப் பட்டன என்பதைப் படிப்பார்.

13) வருஷம், மாதம், நாள், கிழமை இவற்றின் அடைவுகளைக் கொடுத்து நம்பெருமாள் திருவாய்மொழித் திருநாள் 8ஆம் திருநாளைக்கு குதிரை நம்பிரானில் எழுந்தருளி ஆலிநாடன் திருச்சுற்றில் மாறன் பாட்டு கேளா நிற்குகையில் நம் கலியனான திருமங்கை ஆழ்வார் வழிநடையாக வந்து பறித்துக் கொண்டு போன ஸ்ரீபண்டார உடமைகளின் விபவம்:

14) ஸ்ரீரங்க நாராயணஜீயர் காணிக்கை-அஞ்சனகாப்பு தங்கச்சிமிழ் 1, வேதவியாச பட்டர் காணிக்கை- தங்க பதக்கம்-1, பராசரபட்டர் பதக்கம்-1, வாதூல தேசிகர் தாழிப் பதக்கம்-1, உத்தமநம்பி காணிக்கை-ரத்ன தாழி பதக்கம்-1, கந்தாடை ராமாநுஜன் காணிக்கை தங்க உத்தரணி-1, கம்பய மகா தேவராயர் காணிக்கை வெள்ளிக் கொப்பரை-1, விஜயரங்க சொக்கநாத நாயக்கர் திருப்படிகம்-1 ...........

15) அவர்கள் திருடன் போன பாதையிலேயே காலடி பார்த்துப் போய், வழியிலகப்பட்ட வெள்ளித்தடியை "வெள்ளித்தடி மச்சம் கிடைத்துவிட்டது" என்று சொல்லிக் கொண்டு வருவார்கள்.

16)ஸ்தானீகர் வாங்கி உயரப்பிடித்துப் நம்பெருமாளிடம் காட்டுவார். இதற்குள் திருமங்கையாழ்வார் காவல்காரர் கையிலகப்பட்டு அஞ்ஜலி ஹஸ்தராய்ப் நம்பெருமாளிடம் வருவார்.

17) அரையரும் தாளத்தோடு ஆழ்வாருடன் வருவார்.

18) நம்பெருமாள் "அருளப்பாடு கலியன்" என்று தம்முடைய கோரா, குல்லாய் முதலியவற்றை ஆழ்வாருக்கு ஸாதித்திடுவார்.

19) "திருமொழி விண்ணப்பம் செய்வார்" என்று அரை யருக்கு அருளப்பாடு ஆகும்.

20) அரையர் “**வாடினேன் வாடி**” (பெரியதிருமொழி 1-1-1) ஸேவித்த பிறகு, நம்பெருமாள் புறப்பட்டு, காவல்காரர்களுக்கு மரியாதை செய்வித்து, அரையர்களுக்கு அருளப்பாடு ஸாதித்து, ஆயிரங்கால் மண்டபத்தில் ஆழ்வாராசாரியர்களுக்காக வாஹனத்துடனேயே ஒய்யார நடையில் போய் திருவந்திக்காப்பு ஆகி, திருமாமணி மண்டபத்திற்கு எழுந்தருளுவார்.

21) பிறகு ஆழ்வார் ஆசார்யர்களுக்கு அருளப்பாடு இன்றியே பரியட்டம், மாலை முதலியன ஸாதிக்கப்படும்.

22) அரையர்களும் அருளப்பாடு இன்றியே 8ஆம் பத்து 110 பாசுரங்களை ஸேவித்திடுவர்.

23) திருவாய்மொழி 8ஆம் பத்து 10ஆம் பதிகம் “நெடுமாற் கடிமை” பாசுரத்திற்கு அபிநய வ்யாக்யானம் ஸேவிக்கப் படும்.

24) இரவு வீணை ஏகாந்தத்தோடு கர்ப்பக்ருஹத்தைச் சென்றடைவார் நம்பெருமாள்.

✸✸✸

## “இராப்பத்து 9-ஆம் திருநாள்” (5-01-2010)

1) இன்று நம்பெருமாள் பரமபத வாசல் வழியாகக் கொட்டகையைச் சென்றடைவார்.

2) தினந்தோறும் நடைபெறுவதுபோல் நம்பெருமாள் மேலைப்படியிலிருந்து கீழே இறங்கியவுடன் துரை மண்டபம் சேரும் வரையில் திருவரங்கக் கூட்டத்தாரால் பாசுரங்கள் ஸேவிக்கப்படும்.

3) ஸ்தானீகர் அருளப்பாடு-“திருவரங்க ப்ரம்மராயர், திருவரங்க மாயனார், திருவரங்க மேயனார், திருவரங்க வெள்ளனார், திருவரங்க அமுதனார், மங்களாரத்தி பட்டர். அருளப்பாடு- திருவரங்கம் கூட்டத்தார்” என்று ஸாதித்தவுடன் கீழ்க்கண்ட பாசுரங் களைப் பெருமாளுக்கு முன்பு ஸேவித்துக் கொண்டு செல்வர்.

4) இவ்வாறு பாசுரங்கள் ஸேவிப்பது துரைமண்டபம்வரை

தொடரும்.

5) திருவங்கக் கூட்டத்தார் ஸேவிக்கும் பாடல் களிலிருந்து ஒரு சில பாடல்கள்:-

**மாலை அசையும் திருவாழும்**

**மார்பில் இழையும் புரிநூலும்**

**வட்ட மதிபோல் திருமுகமும்**

**விட்ட காதும் மலர்க்கண்ணும்**

**கோல நகையும் கனிவாயும்**

**கொண்டல் அனைய தனிவடிவும்**

**கூறை உடையும் எழுதரிய**

**கோயில் உடைய பெருமாளே.**

**பிறையில் சிறந்த நுதலழகி**

**இருகண் புணர்ப்ப இரவு பகல்**

**சிறையில் கரையும் உருகும் நிலை**

**கண்டும் இவளை நினையீரோ!**

**கூடல் தமிழ்மணம் கொண்டுள தென்றல் கொழுந்துடனே**

**ஆடற் சிலைகொண்டு அரங்கன் வரவும் தனிஅமரர்**

**தேடற்கு அரிய பெருமாள் அரங்கர்தன் சேனை என்ன**

**மாடத் தெருவிற்கு முன்னே புகுந்தது வான்நிலவே.**

இந்தப்பாட்டு ஸேவிப்பது ஸ்ரீனிவாஸர் படம் அருகில் முடியும். திரும்ப துரைபிரதக்ஷிணத்தில் தொடக்கம் செய்வதற்கு **திருவரங்கம் கூட்டத்தார்** என்று அருளப்பாடு ஸாதிக்கப்படும்.

**நாடியே வரும் அடியார் துயிலும் கொள்ளார்**

**நச்சரவில் நன்துயிலான் நண்ணிக் கொண்டு**
**ஓடியே வரும்பொன்னி நடுவே வாழார்**
**உடுத்தமுடித் திசையுடனே உலாவ ரையோ**
**தோடுசேர் குழல்மடவார் உலகில் தேவர்**
**தந்தநேர் நன்மொழிக்கும் அடங்க மாட்டார்**
**பாடுவார் இசை அறிவார் அரங்கனாராம்**
**பாவிப்பார் அப்படியே பாவிப்பாரே.**

**தேன்பொதி தாமரைத் திருத்தோள்**
**அழகினிலே செஞ்சொல்மறை**
**தான்தமிழ் செய்த சடகோபன் சொல்லில்**
**எந்தன் சொல்மிகவே**
**மான்திகழ் மார்பன், அழகிய மணவாளன்**
**வண்மைக் கண்டு**
**நான்தொழும் நம்பெருமாள் என்பரே**
**இவர்தான் ஞாலத்துள்ளே.**

துரைபிரதக்ஷிணத்தில் வடக்குப்பக்கம் நம்பெருமாள் திரும்பியதும் பாட்டுக்கள் ஸேவிப்பது முடிவடையும்.

6) இன்று 9ஆம் பத்து முதல் திருவாய்மொழி ''கொண்ட பெண்டிர்'' தொடங்கி, 9ஆம் பத்து 10ஆம் திருவாய்மொழிப் பதிகம் ''மாலை நண்ணி'' முடிய 110 பாசுரங்கள் ஸேவிக்கப்படும். ''மாலை நண்ணி'' பாசுரத்திற்கு அரையர் அபிநயமும், வ்யாக்யானமும் நடைபெறும்.

7)இன்றிரவு வீணைக்காரருக்கு ஸேவை மரியாதை நடைபெறும்.

8) 10ஆம் திருநாளன்று வீணை ஏகாந்தம் கிடையாது.

9) இன்று நம்பெருமாள் உள்ளே எழுந்தருளியபிறகே சயன பேரருக்கு சயனம் நடைபெறும்.

10) 10ஆம் திருநாளன்று சயனபேரர் சந்திரபுஷ்கருணிக்கு எழுந்தருளி, தீர்த்தவாரிக்கு எழுந்தருளுவார். ✱✱✱

## "இராப்பத்து 10-ஆம் திருநாள்" (6-01-2010)

1) இன்று நம்பெருமாள் பெரிய அவசர ஆராதனம் இல்லாமலேயே புறப்பட்டுப் பரமபத வாசல் வழியாக சந்திர புஷ்கரிணிக்கு எழுந்தருளுவார்.

2) சின்னப் பெருமாளும் கூடவே பல்லக்கில் எழுந் தருளுவார்.

3) சந்திரபுஷ்கரிணியில் சின்னப்பெருமாளை எடுத்துக் கொண்டு அர்ச்சகர் தீர்த்தமாடுவார்.

4) சின்னப் பெருமாளின் திருமேனி ஸம்பந்தப்பட்ட தீர்த்தம் கோஷ்டிக்கு விநியோகம் ஆகும்.

5) சின்னப்பெருமாள் பரமபத வாசல் வழியாகவே கர்ப்பக்ருஹத்திற்கு எழுந்தருளுவார்.

6) நம்பெருமாள் ஆயிரங்கால் மண்டபத்திற்கு எழுந்தருளுவார்.

7) திருவந்திக்காப்பு ஆகி, நம்பெருமாள் புறப்பாடு கண்டருளும்போது வழியில் வந்து தண்டன் ஸமர்ப்பிக்கும் முறைகார பட்டரை நோக்கி "நம் பட்டரை வீட்டில் விட்டு வா" என்று அருளப்பாடு ஆகும்.

8) முறைகார பட்டர் தனக்கு சாற்றப்பட்ட மாலையைத் தரித்துக் கொண்டு திருமாமணி மண்டபத்தில் நம்பெருமாள் எழுந்தருளியவுடன் ஸ்ரீசடகோபன் ஸாதிக்கப் பெற்று, கொட்டகையில் உள்ள கேடயத்தில் ஏறி ப்ரம்மரத வைபவமாய் திருமாளிகைக்கு எழுந்தருளுவார். வேத பாராயண ஸேவைக்காக இந்த ப்ரம்மரதம் பட்டருக்கு அளிக்கப்படுகிறது.

9) மாலை நம்பெருமாள் திருமஞ்சனம் கண்டருளுவார்.

10) அரையர் ஸேவையில் ‘‘தாள தாமரை’’ அபிநயம் ஆகும். (திருவாய்மொழி 10-1-1)

11) சின்ன அலங்காரம் வந்து அமுது செய்வித்த பிறகு, பன்னீராயிரம் திருப்பணியாரங்கள் கொண்ட பெரிய அலங்காரம் நம்பெருமாளுக்கு அமுது செய்விக்கப்படும். ஆண்டு முழுவதும் திருப்பணியாரம் கண்டருளப் பண்ணுவதில் ஏற்படும் குறையை நிவர்த்தி செய்வதற்கு இந்தப் பெரிய அலங்காரம் ஸமர்ப்பிக்கப் படுகிறது.

12) அரையர் 10ஆம் பத்து 8ஆம் பதிகம் முடிய 80 பாட்டுக்கள் ஸேவித்து நிறுத்துவார்.

13) மறுநாள் காலை 2 அர்ச்சகர்கள் தம் சரீரத்தைப் போர்த்திக் கொண்டு நம்மாழ்வாரை தம் கரங்களில் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு நம்பெருமாளிடம் செல்வார்கள்.

14) அரையர்கள் ‘‘சூழ்விசும்பணி முகில்’’ என்னும் 10ஆம் பத்து 9ஆம் பதிகம் அனைத்துப் பாசுரங்களையும் ஸேவித்துக் கொண்டு ஆழ்வார் பின் செல்வர்.

15) நம்மாழ்வாரை நம்பெருமாள் திருவடிகளில் சேர்ப்பிப்பார் அர்ச்சகர்.

16) அரையர்கள் திருவாய்மொழி 10ஆம் பத்து 10ஆம் பதிகம் ‘‘முனியே நான்முகனே முக்கண்ணப்பா’’ தொடங்கிப் பாசுரங்களைத் தாளத்தோடு ஸேவிப்பர்.

17) ஆழ்வார்மீது திருத்துழாய் ஸமர்ப்பித்துக் கொண்டேயிருப்பார் அர்ச்சகர்.

18) பாசுரங்கள் பூர்த்தியானதும் நம்பெருமாள் ஆழ்வாருக்குத் தம்முடைய கஸ்தூரி திருமண்காப்பையும், மாலையையும் அனுக்ரஹிப்பார்.

19) ஆழ்வார் முன்போல தம்முடைய ஸ்தானத்திற்கு எழுந்தருளுவார்.

20) இப்பொழுது அரையர் கண்ணிநுண் சிறுத்தாம்பு ஸேவித்துக் கொண்டே வருவார்.

21) பாசுரம் ஸேவித்து அரையர்கள் வாழித்திருநாமம், மங்களம் ஸேவித்ததும் நம்பெருமாள் திருவடிகளில் ஆழ்வார் திருமேனியில் ஸமர்ப்பித்த திருத்துழாய்களில் ஒருகொத்து அர்ச்சகர்களுக்கும், இரண்டு கொத்து இரண்டு அரையர்களுக்கும், ஒரு கொத்து ஊழியத்திற்கும், ஒரு கொத்து வாதூல தேசிகருக்கும், ஒரு கொத்து மணியகாரருக்கும், ஒரு கொத்து வைஷ்ணவருக்கும் ஸாதித்த பிறகு ஆழ்வார் மாலை மரியாதைகள் பெற்றுக் கொண்டு திரும்பி எழுந்தருளுவார்.

22) தீர்த்த கோஷ்டி, திருத்துழாய் விநியோகம் ஆனபிறகு, நம்பெருமாள் திருமாமணி மண்டபத்திலிருந்து புறப்பட்டு, ஆழ்வார் ஆசார்யர்களுக்கு திருப்பரியட்டம் சன்மானமாக அளித்திடுவார்.

23) ஸ்தானீகர் ''நாயிந்தே ரகுநாதா'' என்று ப்ரார்த்திப்பார்.

24) அப்போது ''கோவணவா! கோவணவா! ஸேவாபலம் தந்தோம்; தீர்த்தபலம் தந்தோம்; மேலே திருக் கல்யாணோத்ஸவத்தை நன்றாய் நடத்திவை'' என்று அர்ச்சகமுகேன நம்பெருமாள் திருவாய் மலர்ந்தருளுவார்.

25) ஸேவை மரியாதை பெற்றுக் கொண்டு நிற்கும் மணியகாரர் ''நாயிந்தே நாயிந்தே'' என்று கூறிடுவார்.

26) ஸ்தானீகர் **மங்கள வாத்யம்** என்று சொல்ல, வாத்யம் முழங்கும்.

27) நம்பெருமாள் கொஞ்சதூரம் சென்றவுடன், ''நம் பாடுவானை வீட்டில் விட்டுவா'' என்று அரையருக்கு அருளப்பாடு ஆகும்.

28) நம்பெருமாள் காயத்ரீ மண்டபத்தில் அமுதுபாறையில் எழுந்தருளியவுடன் அரையருக்கு தான் சாற்றிக் கொண்ட மாலையை சாதித்துவிடுவார்.

29) பிறகு மூலஸ்தானத்தில் அரையருக்கு ஸேவை ஆனவுடன் அரையர் திருவாய்மொழி சாற்றுமுறையில் வாழி மங்களம் ஆகியவற்றை கைத்தாளத்தில் ஸேவிப்பர். (இந்த நிகழ்ச்சி கலாபத்தின் போது அரையர்கள் கைத்தாளத்தில் கோயில்திருமொழி,

கோயில்திருவாய்மொழி ஆகியவற்றை ஸேவித்ததை நினைவூட்டும் நிகழ்ச்சியாகும்.)

30) பிறகு அரையர் நம்மாழ்வார் ஸந்நிதிக்கு வருகை தந்து, மரியாதைகளைப் பெற்றுக் கொள்வார்.

31) கேடயம் ஏறி, ப்ரம்மரத வைபவமாகத் திருமாளிகைக்கு எழுந்தருளுவார்.

32) இன்று நம்பெருமாள் கருவறைக்கு எழுந்தருளிய பிறகே முந்தைய இரவு நடக்க வேண்டிய அரவணைத் தளிகை, பால் ஆகியவை ஸமர்ப்பிக்கப்படும்.

33) இத்தகைய வைபவங்களோடு இராப்பத்து விழா முடிவுறுகிறது.

✸✸✸

## "இயற்பா சாற்றுமுறை"

1) ஆழ்வார் திருவடி தொழுது நம்பெருமாள் கர்ப்ப க்ருஹத்திற்கு எழுந்தருளிய அன்று இரவு, திருவரங்கத்தமுதனார் எழுந்தருளி நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் மூன்றாம் பகுதியான இயற்பா பாசுரங்களை ஸேவித்திடுவர்.

2) திருவரங்கத்தமுதனார் ஸந்ததியினர் இந்தக் கைங்கர்யத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாததால் அரையர்கள் இயற்பா பாசுரங்களை ஸேவிக்கின்றனர்.

3) இந்த நிகழ்ச்சி சந்தன மண்டபத்தில் நடைபெறும்.

4) ஆயினும், இயற்பா ஸேவித்ததற்கான ப்ரம்ம ரத மரியாதையை அரையர்கள் பெற்றுக் கொள்வதில்லை.

5) இயற்பா தொடக்கம் திருநெடுந்தாண்டகம் தொடக்கத்தன்று நடைபெற்றது போல நடைபெறும்.

6) சந்தன மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், முதலாழ்வார்கள் ஆகியோருடன் பெரியாழ்வார், உடையவர், கூரத்தாழ்வான் ஆகியோரும் எழுந்தருளியிருப்பர்.

7) இவர்களுக்கு அருளப்பாடு இல்லாமலேயே பரியட்ட மரியாதைகள் ஸாதிக்கப்படும்.

8) ஸ்ரீசைலேச தயாபாத்ரம் முதலான பஞ்ச தனியன்களைச் சொல்லி, ஸ்ரீகோசத்தைப் பார்த்தே முதல் திருவந்தாதி-10 பாசுரங்களையும் ஸேவிப்பார்கள்.

9) கோஷ்டிக்குத் தேங்காய்த் துருவல் வினியோகம் ஆனதும், அமுதனார் (அரையர்) சந்தன மண்டபத்தில் ஆழ்வாராசாரியர்களுக்கு சமீபமாகக் கிழக்கு முகமாயிருந்து திருமடல் வரைக்குமுள்ள இயற்பா ப்ரபந்தங்கள் எல்லாம் ஸ்ரீகோசத்தைப் பார்த்தே ஸேவிப்பார். (இது உடையவர் இட்ட கட்டளை க்ரமத்தில் நடைபெறுகிறது).

10) பெருமாள் அலங்காரம் அமுது செய்து, கோஷ்டி வினியோகமான பிறகு, திருவாராதனம் ஆரம்பமாகும்.

11) எப்பொழுதும் திருவாராதனத்தில் ஸேவிக்க வேண்டிய திருப்பாவைக்கு பதிலாக இன்று இராமாநுச நூற்றந்தாதி 106 பாசுரங்கள் ஸேவிக்கப்படும்.

12) பிறகு வேதவிண்ணப்பம், அமுதுபடிகள் ஸமர்ப்பித்தல் ஆகியவை நடைபெறும்,

13) அமுதனார் உள்ளே போய் சாற்றுமுறை செய்வார்.

14) **சாற்றுமுறைக்ரமம்:**- இராமாநுச நூற்றந்தாதி கடைசி பாசுரங்கள், பல்லாண்டு, அடியோமோடும், மணவாள மாமுனிகள் சேர்த்த இயல்சாற்று, நன்றும் திருவுடையோம், என்று முதல் மணவாளமாமுனியே இன்னுமொரு நூற்றாண்டிரும் என்பது வரையில்.

15) சீராரும் யதிராசர், சீராரும் திருப்பதிகள், என் தாதை கூரேசர் என்னும் 3 பாட்டுக்கள் ஸேவிக்கப்படும்.

16) இவ்வளவும் ஸேவிக்கையில் அர்ச்சகர்கள் நம்பெருமாள் திருவடியில் திருத்துழாய் ஸமர்ப்பித்துக் கொண்டிருப்பார்.

17) அமுதனார் இப்படிப் பெரியபெருமாளிடம் சாற்றுமுறை செய்த வண்ணமே வெளியே வந்து ஆழ்வாரா சாரியர்களுக்காக துவாரபாலகர்கள் பக்கத்தில் நின்றுகொண்டு சாற்றுமுறை செய்வார்.

இப்பொழுதும் பெருமாள் திருவடியில் திருத்துழாய் ஸமர்ப்பிக்கப் படும்.

18) உடனே ஸந்நிதி வாசலிலிருக்கும் கோஷ்டிக்குத் திருத் துழாய் வினியோகமும், தீர்த்த வினியோகமும் ஆகும்.

19) ஒவ்வொரு கோஷ்டியிலும் திருவாய் முழக்கம் என்று சொல்லி அரையருக்கு ஸாதிக்க வேண்டிய வினியோகமெல்லாம் இன்று திருவரங்கத்தமுதனார் என்று சொல்லி ஸாதிக்கப்படும்.

20) ஆழ்வாராசாரியர்கள் யாவரும் ஸ்ரீசடகோபம் பெற்றுக் கொண்டு ஸ்தோத்ரபாட கோஷ்டியோடு எழுந்தருளினதும், அமுதனாருக்குப் நம்பெருமாள் தம்முடைய மாலையைக் களைந்து ஸாதித்து, ஸேவை மரியாதை செய்து வைத்து ''என் அமுதனை வீட்டில் விட்டு வா'' என்று மணியகாரரை ஆக்ஞாபிப்பார்.

21) பிறகு ஆர்யபட்டாள் வாசலில் அமுதனார் கேடயமேறி பிரம்மரத வைபவத்துடன் திருமாளிகைக்கு எழுந்தருளுவார்.

21) தற்போது இந்த வைபவம் நடைபெறுவதில்லை.

***